A/L 87 DAY CLASS
Mon. Fri. 7-30 — 6-30
பௌதிகம்
திரு. இ. சத்தியசீலன்
★ ஒளியியல் ★
(துரித மீட்டல் வகுப்பு)
ஆரம்பமாகிவிட்டது
New Master
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA

சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

89 A/L
பிரிவு: II
விலங்கியல் – நாகநாதன்
தாவரவியல் – குகநாதன்
பௌதிகவியல் – வர்ணம்
இரசாயனவியல் – தில்லைநாதன்
தூய – பிரயோக கணிதம் – திரு. நல்லையா
New Master
INSTITUTE
B. M. C. Lane, JAFFNA.

மலர்:-2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு வைகாசி மீ 02 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ழான் பிறை 17 (16-05-1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY இதழ்:17

கருத்துக் கலசம்

மயூரா

கிழக்கும் மேற்கும்

செடில்குத்திக் காவடி எடுத்தல் ஒருவகை அக்குபஞ்சர் வைத்திய முறை. அது நிரந்தர பல நோய்களைத் தீர்க்கும் சக்தி வாய்ந்தது. தசைக்கு ஏற்படும் மாறுதல் நோய்களை, கடவுள் நம்பிக்கையின் பேரில் நேர்த்திவைத்து, செடில் காவடி எடுத்துப் பண்டைக்கால மக்கள் தீர்த்தனர்.

இவ்வாறு அக்குபஞ்சர் வைத்தியர்கள் கலந்துகொண்ட வைபவம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

செடில் காவடி மட்டுமல்ல, சமய சம்பிரதாயங்கள் பலவுமே விஞ்ஞானத்தை, சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டவைதான்.

கோவிலில் கற்பூரம் ஏற்றுவது முதல் வடக்கே கால் நீட்டிப் படுக்கக்கூடாது, இரவில் சாப்பாட்டை இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லும்போது கரி போட்டுக் கொண்டு செல்ல வேண்டும் என்ற 'சாத்திரங்கள்'' வரை விஞ்ஞானத் தத்துவங்களை, கோட்பாடுகளை அடிப்படையாக வைத்து எழுந்தவையே.

இந்த சமயத்தைப் பொறுத்தவரை அதன் கிரியைகள், சம்பிரதாயங்கள், வாழ்க்கை நடைமுறைகள் மட்டுமன்றி அதன் ஆகமங்கள், கோட்பாடுகள், தத்துவங்கள் யாவுமே விஞ்ஞானத் தளமுடையவை ஆகும்.

பண்டைக் காலத்தில், கிழக்கில் விஞ்ஞானம் பல துறைகளிலும் பெருமளவில் வளர்ச்சி கண்டிருந்தது. வைத்தியம், வானியல், புவியியல், நீதியல் எனப் பல துறைகளிலும் அரிய தத்துவங்களையும் கோட்பாடுகளையும் கீழைத்தேச அறிஞர்கள் கண்டறிந்தனர். அறிவியல் துறையில் அவர்கள் நுண்ணறிவு பெற்றவர்களாக விளங்கினர்.

அந்த அறிவியல் தத்துவங்கள், கோட்பாடுகள் சமய தத்துவங்களிலும் கோட்பாடுகளிலும் சேர்க்கப்பட்டன. அதாவது விஞ்ஞானத்துக்கும் மெஞ்ஞானத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஞானிகளும் மகான்களும் அதற்கு வழி செய்தனர்.

கால ஓட்டத்தில், அறிவியல் தத்துவங்களும் கோட்பாடுகளும் முழுக்க முழுக்கச் சமயத்திற்குள்ளேயே மூழ்கிக்கொண்டன. கீழைத்தேச மக்கள் குறிப்பாக ஆசிய மக்கள் ஆன்மீகச் சார்பான வாழ்க்கையையே நாடினார்கள்.

மேலைத் தேசங்களில் விஞ்ஞானம் வளரத் தொடங்கி இப்போது பெரு முன்னேற்றம் கண்டிருக்கிறது. மேல்நாட்டு மக்கள் விஞ்ஞான அறிவை வாழ்க்கையோடு இணைத்து, தமது வசதிகளைப் பெருக்கிக் கொண்டார்கள். அவர்களோடு ஒப்பிடும்போது, கீழைத் தேச நாடுகள் விஞ்ஞான அறிவு இல்லாதவையாக, இப்போதுதான் அத்துறையில் வளர்ந்து வருபவையாக வெளி

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஆனையிறவிலிருந்து

பயணிகளை பணயம் வைத்து சிப்பாய்கள் யாழ். நோக்கிப் புறப்பாடு?

நூற்றுக் கணக்கில் வாகனங்கள் மறித்து வைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே. 16

ஆனையிறவில் இருந்து பயணிகளைப் பணயம் வைத்து சிப்பாய்கள் யாழ் நோக்கிப் புறப்படத் திட்டமிட்டிருப்பதாக நேற்று மாலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதற்கு வசதியாக லொறிகள், சில பயணிகள் பஸ்கள் உட்பட நூற்றுக்கணக்கான வாகனங்களை படையினர் ஆனையிறவில் மறித்து வைத்திருக்கிறார்கள்.

இந்த லொறிகள் சிலவற்றில் படையினர் பெருந்தொகையான மண் மூடைகள், முட்கம்பிகள், மரக்குற்றிகள் ஆகியவற்றையும் ஏற்றித் தயார் நிலையில் வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுக் காலை பத்து மணி அளவில் முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிப்பாய்களை எதிர்த்து போராளிகள் குழு தாக்குதல் நடத்தியதாகவும்– இதனையடுத்து சிப்பாய்கள் முகாமுக்குத் திரும்பி அங்கிருந்து ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நேற்று வெளியூருக்குச் சென்ற சில பஸ்கள் இடைவழியில் யாழ்ப்பாணம் திரும்பின.

கொழும்பில் இருந்து இரண்டொரு பஸ்களே நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

அனேகமான கொழும்பு, வவுனியா சேவை பஸ்கள் இரவு 10 30 மணி வரை யாழ்நகரை வந்தடையவில்லை.

நேற்றிரவு ஆனையிறவில் நிலவிய சூழ்நிலை குறித்து தகவல் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (உ-10)

உண்ணாவிரதமிருக்கும் 5 தமிழ்க் கைதிகளின் நிலை ஆபத்தான கட்டத்தில்

கொழும்பு, மே 16

கொழும்பு மகஸின் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளில் ஐவரின் நிலை ஆபத்தான கட்டத்தை அடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த பதினொரு தினங்களாக அவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

தங்காலை சிறையில் உள்ள தமிழ்க் கைதிகளை மகஸீன் சிறைக்கு மாற்றவேண்டும். மகஸீன் சிறையில் உள்ள கைதிகளுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் — இக் கோரிக்கைகளை முன் வைத்து தமிழ்க்கைதிகள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். (உ-எ)

5 ரெலோ உறுப்பினர் மதுரைச் சிறையில் உண்ணாவிரதம்!

மதுரை, மே 16

மதுரை தபால் கந்தோர் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக மதுரை மத்திய சிறையில் [illegible] வைக்கப்பட்டிருக்கும் ஐந்து ரெலோ உறுப்பினர்கள் இம்மாதம் 6ம் திகதிமுதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

மயக்கமடைந்த நிலையில் இவர்கள் இம்மாதம் 10ஆம் திகதி மதுரை ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நீண்டகாலமாக வழக்கு தொடரப்படாமல் இந்திய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே ரெலோ உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக கைதான இந்தியப் பிரசைகள் சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டுவிட்டனர். (உ-ஜ-எ)

சுபநேரம்

16-05-1987
சனிக்கிழமை
சுபநேரம்:–
2-53 முதல் 4-23 வரை
ராகுகாலம்:–
8-53 முதல் 10-23 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பிரித்து வைப்பதே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

'ராணி' தலையங்கம்

சென்னை, மே 16

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சிங்களவர்களையும் தமிழர்களையும் நிரந்தரமாகப் பிரித்து வைப்பதே ஒரே வழி என இந்தியாவிலிருந்து வெளியாகும் 'ராணி' வார சஞ்சிகை தனது மே 10-ஆம் திகதி இதழில் கருத்து வெளியிட்டிருக்கிறது.

அண்மையில் வெலிக்கடைச் சிறையில் நடந்த சம்பவத்தைச் சுட்டிக்காட்டியே இக்கருத்தை அப்பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

அச்சஞ்சிகையின் கருத்து வருமாறு:

வெலிக்கடைச் சிறையில் 3 ஆயிரம் சிங்களக் கைதிகளும் 800 தமிழ் போராட்ட வீரர்களும் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

பஸ்நிலையத்தில் குண்டு வெடித்து 800 சிங்களவர் இறந்தனர். உடனே இந்தச் சிறையில் இருந்த சிங்களக் கைதிகள் தமிழ் வீரர்களைத் தாக்கினர்.

இராணுவம் தலையிட்டு தமிழர்களைப் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றியது. சிங்களக் கைதிகளும் தமிழ்க் கைதிகளும் பிரித்து வைக்கப்பட்டபின்னர் சிறையில் அமைதி ஏற்பட்டது.

இலங்கை முழுவதும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

திருமலை தாக்குதலில் 24 படையினர் பலி!

புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்தில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட இரு கண்ணி வெடித்தாக்குதல்களில் மொத்தம் 24 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

முதலாவது சம்பவம் திருகோணமலை – யாழ்ப்பாணம் வீதியில் உள்ள பன்குளத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

அங்கு ரக் வண்டி மீது நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் வண்டி முற்றாகச் சேதமடைந்தது. அதில் பயணம் செய்த 10 இராணுவத்தினரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

மற்றைய தாக்குதல் காலை 10 30 மணியளவில் நடைபெற்றது.

திருகோணமலையில் இருந்து நிலாவெளிக்கு 4 ஜீப் 8, இ.போ.ச. பஸ், ஒருவான், ஒரு லொறி ஆகியவற்றில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ வாகனம் முற்றாகச் சேதமடைந்தது.

அதில் இருந்த 14 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

– இப்படி புலிகள் அறிவித்துள்ளனர் (உ-7)

காட்டில் தடுத்துவைப்பு?

கொழும்பு, மே 16

ஜே.வி.பியினரால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் தங்காலை எம்.பி ஜினதாஸ வீரசிங்கவின் நெருங்கிய ஆதரவாளரான டி. எச். மகாநம காட்டில் உள்ள முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறாராம்.

குறிப்பிட்ட பிரதேசத்தை பொலிஸார் முற்றுகையிட்டுத் தேடுதல் நடத்துகின்றனர் என்று பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

ஜே.வி.பி உறுப்பினர்கள் பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததற்காகவே இவர் கடத்தப்பட்டதாக தங்காலை எம்.பி திரு. வீரசிங்க தெரிவித்தார். (உ-எ)

வயாவிளான் ஷெல் திருநெல்வேலியில் விழுந்தது

திருநெல்வேலி, மே 16

வயாவிளான் மினி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் வியாழன் இரவு 11-30 மணியளவில் சுமார் எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள திருநெல்வேலியில் வந்து விழுந்து வெடித்தன.

திருநெல்வேலி பலாலி வீதியில் சந்திக்கு அருகாமையில் உள்ள நல்லையா என்பவரது வீட்டின் முன் விழுந்த ஷெல்லினால் அவரது மகன் நகுலராசா (வயது 16) காலில் காயம் அடைந்தார்.

இவருடைய வீட்டில் கட்டி இருந்த பசுமாடு ஒன்றும் இறந்தது.

மற்றைய ஷெல் திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள மணிகம் என்பவரது

(8ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் படுகொலையை தடுக்க மத்திய அரசிடம் எதிரணிகள் கோரிக்கை

புதுடில்லி, மே 16

இலங்கையில் தமிழர் இனப்படுகொலைக்குள்ளாவதைத் தடுக்க இந்திய மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

இந்தியாவின் பதினொரு எதிர்க்கட்சிகள் இக் கோரிக்கையை மத்திய அரசுக்கு விடுத்துள்ளன.

பதினொரு எதிர்க்கட்சிகளின் இரண்டுநாள் கூட்டம் நேற்று புதுடில்லியில் நடந்து முடிந்தது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அஸாம் கணபரிஷத் பாரதீய ஜனதாக் கட்சி, அ. தி. மு. க. ஆகியன தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டன.

இக் கூட்டத்தில் இர

(8 ஆம் பக்கம் பார்க்க)

வேம்படி மகளிர் திங்கள் முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், மே 16

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வேம்படி மகளிர் கல்லூரி வழமைபோல் இயங்கும்.

இவ்வாறு நேற்று கல்லூரியில் நடைபெற்ற பெற்றோர் – அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திங்கட்கிழமை முதல் பிள்ளைகளைப் பெற்றோர் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் எனவும்–

மாணவிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு அதிபர், ஆசிரியர்கள் முயற்சிகள் எடுத்திருப்பதாகவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பாடசாலையை எக்காரணம் கொண்டும் வேறு இடத்திற்கு மாற்றுவதில்லை என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

யாழ் மத்திய கல்லூரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் ஆஸ்பத்திரியை மூடும் முடிவை தொண்டமான் நியாயப்படுத்துகிறார்

மதுரை, மே. 16

யாழ் ஆஸ்பத்திரியை மூட அரசு எடுத்த முடிவுக்கு தக்க காரணம் உண்டு. இதனை யாரும் ஆட்சேபிக்க முடியாது

-இப்படி அமைச்சர் தொண்டமான் மதுரையில் செய்தியாளர்களிடம் சொன்னார்-

தமிழக அரசு இலங்கைத் தமிழருக்கு வழங்குவதாக கூறிய 8 கோடி ரூபா உணவு, மருந்துவகைகள் தமிழர்களிடம் போய்ச் சேருமா என்பதே சந்தேகம். இப்படி அமைச்சர் தொண்டமான் மேலும் தெரிவித்தார். (உ-ஜ-எ)

மன்னாரில் தேடுதல் 30 பேர் தடுத்துவைப்பு

மன்னார், மே 16

மன்னார், பகுதியில் நேற்று பாதுகாப்பு படையினர் நடத்திய கடுந்தேடுதல் நடவடிக்கையின் போது நூற்றுக்கு அதிகமான பொதுமக்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

மன்னார், மாந்தை, மாதோட்டம் பகுதிகளில் இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தேடுதல் நடவடிக்கையின் போது வீடு ஒன்றில் இருந்து [illegible] முயன்ற சிலர் பாதுகாப்புப் படையினரின் சூட்டுக்கு இலக்கானதாகவும், சிலர் உயிரிழந்ததாகவும் தெரிய வருகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் அனேகமானோர் விடுதலை செய்யப்பட்டதாகவும் –

சுமார் 30 பேர் மாத்திரம் காப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது (உ-10)

கைதடிப் பாலத்தில் மினிபஸ் குடைசாய்ந்தது!

யாழ்ப்பாணம், மே 16

யாழ்தேவியைப் பிடிப்பதற்கென வேகமாகச் சென்ற மினிபஸ் ஒன்று கோப்பாய்- கைதடிப் பாலத்துக்கு அருகில் குடைசாய்ந்தது.

இதன் காரணமாக நான்கு பேர் காயம் அடைந்தனர். மினிபஸ் சேதமடைந்தது.

நேற்றுக் காலை 8 15 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. (உ-10)

மணமகளை கோட்டைவிட்ட மணமகன்

பஹ்ரைன், மே 15

முகூர்த்த நேரத்துக்கு வர மணமகன் பிந்தி விட்டார்.

மணமகளின் தந்தைக்கு ஆத்திரம் வந்து விட்டது.

வந்திருந்த விருந்தாளிகளில் ஒருவருக்கு மகளைத் திருமணஞ் செய்து வைத்து விட்டார்.

இச் சம்பவம் சவூதி அரேபியாவில் நடந்தது. இத்தகவலை அக்பர் அல் காலிஜ் என்ற நாளிதழ் வெளியிட்டுள்ளது. (உ-எ)

செய்திச் சாரம்

பொன்னாலையில் ஹெலி சூடு!

காரைநகர், மே 16

நேற்றுக்காலை 8-30 மணியளவில் இருதடவை காரைநகர் கடற்படை முகாமுக்கு வந்து திரும்பிய ஹெலிகப்டர் ஒன்று பொன்னாலைச் சந்தியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

ஆனால் எவரும் காயமடையவில்லை. (உ-7)

வங்கி ஊழியரை தேடி வேட்டை

கொழும்பு, மே 16

திவுலப்பிட்டிய மக்கள் வங்கிக் கொள்ளைச் சம்பவத்தை அடுத்து தலைமறைவாகிப் போன வங்கி ஊழியர் ஒருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

சம்பவதினம் வேலைக்கு வராமல் நின்ற ஏனைய ஊழியர்கள் தகுந்த காரணங்களைத் தெரிவித்துள்ளனர்.

-இப்படி பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

கான்ஸ்டபிள் பலி!

யாழ்ப்பாணம், மே 16

திருமலை-பன்மதவாச்சி வீதியில் நேற்று ரோந்து சென்ற பொலிஸ் கொமாண்டோக்கள் மீது போராளிகள் தாக்குதல் நடத்தியதில் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்-

எகலியகொடையைச் சேர்ந்த குணரத்ன என்ற கான்ஸ்டபிளே பலியானதாக பொலிஸ் ஜனத் தொடர்பு நிலையம் அறிவித்துள்ளது. (உ-10)

பொலிஸ் மீது குண்டு வீச்சு!

கொழும்பு, மே 16

தலவாக்கொல்லை நகரில் தேடுதல் நடத்தச் சென்ற பொலிஸார் மீது நேற்று குண்டு வீசப்பட்டது.

பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்ததாக [illegible] வானொலி நேற்று அறிவித்தது. (உ-எ)

கெமுனு சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், மே 16

யாழ் கோட்டை, மண்டைதீவு இராணுவ முகாம்களுக்கு கெமுனு படைப் பிரிவைச்சேர்ந்த சிப்பாய்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மூன்று கப்பல்களில் ''கெமுனு'' படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் நவீனரக ஆயுதங்களுடனும் தளபாடங்களுடனும் முகாம்களுக்கு வந்து சேர்ந்தனர்.

இதேவேளை காங்கேசன்துறை, ஆனையிறவு, பூநகரி, பருத்தித்துறை முகாம்களுக்கும் கெமுனு படைப் பிரிவைச்சேர்ந்த சிப்பாய்களை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளைத் தேசிய பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளதாக அறியவருகிறது (உ-10)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

தீர்வுக்கான முட்டுக்கட்டை நீங்க

ஆட்சித் தலைவர்களுக்குச் சிந்தனைமாறவேண்டும்

இனப்பிரச்சினைப் பேச்சுக்களை ஆரம்பிக்க இன்று முட்டுக்கட்டையாக இருப்பது என்ன?

அண்மையில் இந்தியா சென்ற இடத்தில் அமைச்சர் காமினி திசநாயக்கா இதனைத் தெரிவித்துவிட்டார்.

காமினியின் கண்டுபிடிப்பு வேறு ஒன்றும் அல்ல

முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் இலங்கைத் தமிழருக்கு உதவ 8 கோடி ரூபாவை ஒதுக்கியதுதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இன்று முட்டுக்கட்டையாக உள்ளதாம்!

தமிழர் மீது கொரூரமான முற்றுகை போட்டது முட்டுக்கட்டையாக இல்லை;

அந்த முற்றுகையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழருக்கு உதவ நிதி ஒதுக்கியதுதான் முட்டுக்கட்டையாக உள்ளது- இதுதான் காமினியின் கண்டுபிடிப்பு.

இதில் இருந்து ஒன்று மட்டும் தெளிவாக விளங்குகின்றது

தான் விரும்பும் தீர்வைக் காண்பதற்கு தமிழருக்கு உதவும் சக்திகள் முட்டுக்கட்டையாக இருப்பதாக இலங்கை அரசு எண்ணிச் செயற்பட்டு வருகிறது.

உள்ளும் புறமும்

குறுமுனி

இதுதான் அந்த உண்மை

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்தே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள், இன்று முட்டுக்கட்டை பற்றி பேசுவதுதான் விந்தையாக உள்ளது.

இனம் காணப்பட்டது

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இன்று தடையாக இருப்பதை இனங்களுக்கிடையேயான நீதி, சமத்துவத்தைப் பேணும் இயக்கம் சரியாக இனம்காட்டி உள்ளது.

இலங்கையில் தமிழருக்கு என்று தனித் தாயகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைதான் தீர்வு காணத் தடையாக இருப்பதாக அந்த இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது

இதனைச் சிங்களத் தலைவர்கள், அரசுத் தலைவர்கள் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அந்த இயக்கம் ஆலோசனை கூறியிருக்கின்றது

1,500 கோடி ரூபாவாக பாதுகாப்புச் செலவினம் உயர்ந்துள்ள இந்த நெருக்கடி நேரத்தில் கூட 2500 ஆண்டு கால பௌத்த சரித்திரப் பெருமையை பெரிதாகப் பேசிவரும் அரசுத் தலைவர்களின் சிந்தனையில் இது எங்கே ஏறப் போகிறது?

பசுமைப் புரட்சி, பொருளாதாரப் புரட்சி என்றுஎல்லாம் கூறிவரும் கொழும்பு அரசுக்கு, அரசியல் ரீதியில் சிந்தனைப் புரட்சி ஏற்பட்டதா?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இருப்பது வேறு ஒன்றுமல்ல; அரசுத் தலைவர்களின் சிந்தனையில் ஏற்படாத மாற்றம் தான்!

இதனை அமைச்சர் காமினி உணர்ந்து கொள்ளவேண்டும்.

துணுக்கு

புதுடில்லி ராஜ்ய சபையில் இணை அமைச்சர் நட்வர்சிங்:

கொழும்பில் உள்ள இந்தியத் தூதருடன் இந்திய அரசு தினமும் தொடர்பு கொண்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் சுந்தர் அம்மாள்:

அதுதான் இங்கும் தினமும் ஹெலி தாக்குதலோ.

பேச்சு, பேச்சு, பேச்சு; எப்போதுமே பேச்சு!

(இது ஒரு சரடு)

கிரிங், கிரிங்... டெலிபோன் அடிக்கிறது

புதுடில்லியில் இருந்து ஓர் அழைப்பு. ?

செயலாளர் ஓடிப்போய் தர்மிஷ்டரின் காதில் முணு முணுக்கிறார்.

ரீஸீவரை தூக்கிய தர்மிஷ்டர்! பேசுகிறேன். சொல்லுங்கள்

புதுடில்லி: பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்போமா?

தர்மிஷ்டர்! என்ன ஆரம்பிப்பது. இப்போது பேசிக் கொண்டுதானே இருக்கின்றோம்.

புதுடில்லி: பேச்சுக்களைத் தொடக்கி விட்டீர்களா? அதுவும் நான் இல்லாமல்!

தர்மிஷ்டர்! இனப்பிரச்சினை பற்றி நீங்கள் லோக சபை, ராஜ்ய சபை, பொதுக் கூட்டங்களில் எல்லாம் பேச்சுக்களை நடத்துகின்றீர்கள்.

இங்கு நானும் பொதுக் கூட்டங்கள், மாநாடுகள், அமைச்சரவைக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் பேசிக் கொண்டு இருக்கிறேன்

பேச்சுக்களில் இந்த முன்னேற்றம் போதாதா?

புதுடில்லிப் பக்கத்தில் இருந்து ரீஸீவரை டக் என்று கீழே வைக்கும் சத்தம்தான் கேட்டது

இருபத்து நாலாவது

ஒலிம்பிக் விளையாட்டு விழா

ஓர் அறிமுகம்

உலகின் மிகப்பெரிய விளையாட்டு விழாவான ஒலிம்பிக் போட்டிகளை நடத்த தென்கொரியா இப்போதே தயாராகிவிட்டது.

24வது ஒலிம்பிக் விளையாட்டு விழா தென்கொரிய தலைநகரான சோல் நகரில் 1988ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாக விருப்பது விளையாட்டு ரசிகர்கள் அறிந்ததே. இம்முறை இவ்விளையாட்டுப் போட்டிகளில் 167 நாடுகளைச் சேர்ந்த 13,600 விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. இவ்வளவு தொகையான வீரர்கள் கலந்துகொள்வது இதுவே முதல் தடவை.

இதற்குமுன் 1972 இல் மியூனிச்சில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 123 நாடுகளைச் சேர்ந்த 10,088 வீரர்கள் கலந்து கொண்டபோது இங்கு போட்டியில் கலந்து கொள்ள வந்த இஸ்ரேலிய வீரர்கள் கொலை செய்யப்பட்ட கோர சம்பவத்துடன் போட்டிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன. இதன் பின் நடைபெற்ற போட்டிகளில் அரசியல் காரணங்களால் பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்க, ரஷ்ய, சீன, ஜப்பானிய வீரர்களிடையே போட்டிகள் கடுமையாக இருப்பது வழக்கம். அண்மையில் நடைபெற்ற போட்டிகளில் ரஷ்ய சார்பு நாடுகளில் நடைபெற்ற போட்டிகளை அமெரிக்காவும், அமெரிக்கசார்பு நாடுகளில் நடைபெற்ற போட்டிகளை ரஷ்யாவும் பகிஷ்கரித்து வருவதால் ஒலிம்பிக் போட்டிகள் சுவாரசியம் அற்றுப் போய்விட்டன. இம்முறையாவது இந்த நிலை நீங்கி எல்லா நாடுகளும் பங்கு பற்றும் ஒரு பரிபூரணமான விளையாட்டுப் போட்டி நடைபெறுவது அவசியமாகும்.

வல்லரசு நாடுகள் எல்லாம் தமது அரசியல் பிரச்சினைகளுக்குக் களமாகத் தென்கிழக்காசிய நாடுகளையே பயன்படுத்தி வருகின்றன. தாங்கள் நேரடியாகப் பங்குபற்றாத யுத்தங்களை உருவாக்கித் தம்முடைய பலப்பரீட்சை பார்க்க முற்படுகின்றன

இவ்வகையில் சோல் நகரில் நடைபெறவுள்ள விளையாட்டுக் களத்தைப் பயன்படுத்தித் தமக்குள் உள்ள அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுடன் விளையாட்டு ரசிகர்களுக்குச் சிறப்பான போட்டிகளை அளிக்க முன்வர வேண்டும்.

பல கோடிக்கணக்கான பணச் செலவில் நடத்தப்படும் இவ்வகையான விளையாட்டுப் போட்டிகள் அவற்றை நடாத்தும் நாடுகளுக்குப் பொருளாதார சுமையை மட்டும் கொடுப்பனவாக அமையாமல் நாடுகளுக்கிடையே விளையாட்டுத் தன்மையை, விளையாட்டுப் பண்பை வளர்க்கவும் ஒற்றுமையைப் பேணவும் ஒரு பாலமாக அமைய வேண்டும் என்பதே விளையாட்டு வீரர்கள், ரசிகர்களின் பேரவா.

ஈசன்.

பட்டித்திடல் கிராமத்தில் படையினர் 19 பேரை வெட்டிக்குதறி இரத்தவேள்வி

அந்தக் காட்டுப் பிரதேசம் எங்கும் காட்டுப் பூச்சிகளின் சத்தங்களையும் மீறி காவல் படையினரின் காலடிச் சத்தங்கள் கேட்கிறது

சிப்பாய்களின் சித்திரவதைகளுக்கும் அவர்கள் நடத்தும் மானபங்கத்துக்கும் பயந்து ஊரை விட்டுக் காட்டுக்குள் பயந்து பதுங்கி இருந்தது அந்தக் குடும்பம்.

நரிகளின் ஊளையும், பாம்புகளின் சீறிப்புக்களும் தராத அச்சத்தை சிப்பாய்களின் காலடி ஓசை தந்தது.

குழந்தை ஒன்று அழ ஆரம்பிக்கின்றது

குழந்தையின் சத்தம் சிப்பாய்களுக்குக் கேட்குமோ, அவர்களின் கவனம் இப்பக்கம் திரும்புமோ என்று பயந்தாள் அந்தத் தாய்.

மார்புச் சேலையை விலக்கிக் குழந்தைக்குப் பாலூட்டுகிறாள்.

அகதிகளாய் ஆறு நாட்களாய் உயிருக்குப் பயந்து அன்ன ஆகாரமின்றி அந்தக் காட்டுக்குள் ஒளிந்திருந்தவள் அவள்.

ஆறுநாளாய் ஏதும் உண்ணாததால் அவளுக்குப் பால் சுரக்கவில்லை.

குழந்தை ஏமாற்றத்தால் கத்த ஆரம்பிக்கின்றது

பதறிப்போன தாயோ குழந்தையின் வாயைப் பொத்துகிறாள்

நேரம் செல்லச் செல்ல சிப்பாய்களின் காலடி ஓசை குறைகிறது.

குழந்தையின் வாயில் இருந்த கையை எடுக்கிறாள்

குழந்தையின் தலை தொங்கி விழுகிறது

பொத்திப் பொத்தி வளர்த்த சிசுவை வாயைப் பொத்தியே கொன்று விட்டாள் அவள். அவள் தவித்துக் கதறிய காட்சி கல்மனதையும் கரைய வைக்கும்.

இவ்வாறு நான் கண்ட, அனுபவித்த அவலத்தை என்னிடம் கூறினார் முன்னாள் ஆசிரியையான அந்தப் பெண்மணி.

இவர் மூதூர் பட்டித்திடலில் இருந்து அகதியாக யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்.

இவரது மூன்று சகோதரர்களின் குடும்பத்தினர் 19 பேர் சென்ற ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி சிப்பாய்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

இவரும் இவரது சகோதரியின் ஒரு மகளும் மட்டுமே அன்று தெய்வாதீனமாக மயிரிழையில் உயிர்தப்பியிருந்தனர்

இவர்கள் இருவரும் பட்டித்திடல் தமிழ் மக்களின் அவலங்களைக் கூறியபோது என் கண்ணில் நீர் வழிந்தது.

ஹிட்லர் காலத்தைச் சித்தரிக்கும் ஆங்கிலப் படக்கதைகளைக் கேட்டதுபோல் இருந்தன அவர்கள் கூறிய கதைகளும் அவலங்களும்.

அவர்கள் கண்ணீர் ததும்பக் கூறிய கதைகளைப் படியுங்கள்;

காட்டினிலே, அங்குள்ள சேற்றினிலே ஒளிந்திருந்து தப்பினர் மற்றவர்கள்

தமிழ்க் குடும்பங்கள் நூறு

மூதூரில் தம்பலகாமத்திலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ளது பட்டித்திடல். இங்குள்ள 100 தமிழ் குடும்பங்களுமே விவசாயம் செய்பவை.

அவர்களது வயல்களைப்போல் கடந்த வருடங்களில் அவர்களின் வாழ்க்கையும் பசுமை இழந்துபோயிற்று. அவர்களுக்கென்று அங்கே சுற்றம் எதுவுமில்லை. சிங்களக் குடியேற்றங்கள், முஸ்லீம்களும், இராணுவ முகாம்களுமே அவர்களைச் சுற்றியிருந்தன

சிப்பாய்களும், குண்டர்களும் ஊர்காவல் படையினரும் அவர்களுக்கு இழைத்த கொடுமைகள் எண்ணிலடங்கா. அவர்களுக்கு அங்கே சொந்த வீடுகள் இருந்தாலும், ஊருக்கு வெளியேயுள்ள காடுகளிலேயே அவர்கள் வாசம் செய்தனர்.

தினமும் காவல்படையினர் ஊருக்குள் புகுந்து கண்ணில் கண்டவர்களை எல்லாம் சுடுவார்கள்.

மனைவியின் கண் முன்னே கணவன் சுடப்படுவான். தந்தையின் கண்முன்னே மகளின் மானம் பறிக்கப்படும்

சேற்றுக்குள்ளே அவர்கள் குடியிருப்பு

விடிகாலை முதல் மாலைவரை வீச்சுக் கத்தியால் வெட்டி வீசப்பட்டு, குடல்காட்டி குற்றுயிராய் கிடப்பர்.

இக் கொடுமைகளுக்கு அஞ்சியே பட்டித்திடல் மக்கள் பக்கத்திலுள்ள காட்டுக்குள் அஞ்ஞாதவாசம் செய்கிறார்கள்.

காடு என்னும்போது அது ஒரு வித்தியாசமான காடு. சுற்றிவர இடுப்பளவு சதுப்புச் சேற்று நிலத்தைக் கொண்டது அக்காடு. இயற்கை [illegible] சிப்பாய்கள் சேற்றிலே இறங்கமாட்டார்கள். அதனால் அகதிகள் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

சேற்றுச் சதுப்பின் மத்தியில் பல பாரிய மரங்களுண்டு, அந்த மரங்களில் சாக்கு ஊஞ்சல்களைக் கட்டியிருப்பர் அகதிகள் அவையே அவர்களுக்குக் கட்டிலாகவும், குழந்தைகளுக்கு தொட்டிலாகவும் அந்தக் காட்டில் கைகொடுத்தன.

சேற்று நிலத்திலுள்ள பலபாரிய கருங்கற்பாறைகள் உள்ளன அவை அடிக்கடி அகதிகளின் பாதங்களைப் பதம்பார்க்கும்.

ஊண் உறக்கம் இன்றி

சிலவேளைகளில் தொடர்ந்தாற்போல் ஆறு ஏழு நாட்களுக்கும் உணவு உறக்கம் இன்றி அங்கே பதுங்கியிருக்க வேண்டிவரும்.

அப்போதெல்லாம் சுற்றுப்புறங்களிலிருந்து சிப்பாய்களின் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்கும்.

ஒருசிலர் ஊருக்குச் சென்று உணவு எடுத்து வருவார்கள்

சிலவேளைகளில் அவர்கள் சிப்பாய்களின் கைகளில் சிக்கிக்கொள்வதும் உண்டு

இவ்வாறு சென்ற சந்திரலிங்கமும் அவரது இரு உறவினர்களும் வீட்டோடு சேர்த்து எரிக்கப்பட்டனர்.

மக்கள் அகதிகளாகக் காடுகளை நோக்கி அவதியாக ஓடும்போது நடைபெற்ற அவலச் சம்பவங்கள் பல.

ஆறு கடத்தல்

சிலவேளைகளில் சிறு ஆறுகளைக் கடந்தே காடுகளை அடையவேண்டும். அப்படி ஆறுகளைக் கடக்கும்போது வள்ளங்களிலேயே அகதிகள் பாயிப்பர்.

அவசரத்தில் வள்ளத்தில் ஏறும்போது பல சிறு குழந்தைகள் கைதவறி ஆற்றிலே விழுந்து விடுவதுண்டு. பெற்று வளர்த்தவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே கண்முன்னே சில குழந்தைகள் ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

குழந்தை வீச்சு

இந்த [illegible] வயல்களுக்குச் செல்லும் ஆற்று வாய்க்கால்களிலும் நடைபெறும்

வாய்க்காலில் நீர்மட்டம் உயர்ந்து இருக்கும். இதனுள் குழந்தைகளை வாய்க்காலின் ஒருபுறத்திலிருந்து ஒருவர் வீச மறுபுறத்திலுள்ளவர்கள் ஏந்திப் பிடித்துக்கொள்வார்கள்.

இரு குழந்தைகள் இத்தவணையில் தவறி வாய்க்காலுக்குள் விழுந்தது உண்டு

தாய்மாரின் கண் முன்னே கைக்குழந்தைகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

★ இது நெஞ்சை உருக்கும் ஒரு கண்ணீர்க் கதை

எஸ். ஜே. பி. ரட்ணதுரை

(7ஆம் பக்கம் பார்க்க)

HORIZON ENTERPRISES

★ விலாச மாற்றம் ★

எமது காரியாலயம் சூழ்நிலை காரணமாய் தற்காலிகமாக இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

A. பத்மதாஸ்
மதுரா வீடியோ கிளப்
இல. 96, நான்காம் குறுக்குத் தெரு, சின்னக்கடை.

என்ற முகவரியிலிருந்து

A. பத்மதாஸ்
இல. 97/1 பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்

என்ற விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்:
காலை 9 - மணி மாலை 5 மணி எல்லா நாட்களிலும் சந்திக்கலாம்.

★ குவைத் ★ சவுதி ★ ஓமான் ★ டோகா

ஆகிய நாடுகளுக்கான வேலை வாய்ப்புடன் செல்ல விரும்புவோர் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும் கடிதமூலம் தொடர்பு கொள்வோர் [illegible] முத்திரை அனுப்பவும். எம்மிடம் எல்லா நாடுகளுக்குமான முத்திரை மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் உங்கள் கடவுச்சீட்டு (Passport) குறைந்த செலவில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

A. பத்மதாஸ்
இல. 97/1 பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
எமக்கு வேறு கிளைகள் கிடையாது.
எக்காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.

விளையாட்டுத் துறை

பிரதேச அபிவிருத்தி அமைச்சுத் தமிழ்ப்பிரிவு

பண்டிதர்கள், புலவர்கள், ஆகியோர் பற்றிய

விபரங்கள் திரட்டல்

இலங்கையில் உள்ள "பண்டிதர்கள், பாலபண்டிதர்கள், சைவப் புலவர்கள்" ஆகியோரது பட்டியல் ஒன்றை தயாரிக்கப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எனவே இலங்கையிலுள்ள "பண்டிதர்கள், பாலபண்டிதர்கள், புலவர்கள், சைவப்புலவர்கள், ஆகியோர் தம்மைப்பற்றிய விபரங்களைக் கீழ் காட்டியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

01 பெயர் ... ...

02 விலாசம்: ... ...

03 வயதும், பிறந்த திகதியும்: ... ...

04 பட்டம் (பண்டிதர் / பாலபண்டிதர் / புலவர் / சைவப்புலவர்:

... ...

05 பட்டம் வழங்கிய நிறுவனத்தின் பெயரும் அஞ்சல் முகவரியும்!

... ...

... ...

06, பட்டம் பெற்ற ஆண்டு, மாதம், நாள்

... ...

07. தொழில் (இளைப்பாறியவராயின், இளைப்பாற முன் செய்த தொழில்:)

... ...

... ...

08. மேற்கொண்ட ஆராய்ச்சி பற்றிய விபரங்கள்:

09. வெளியிட்டுள்ள நூல்கள்: ... ...

... ...

10 வெளியிடாது கையெழுத்துப் படியாய் உள்ள நூல்கள்:

ம. இராசநாயகம்,
தமிழலுவல் பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244, காலி வீதி
கொழும்பு - 4

சஞ்சீவி கவிதைக் கதம்பம்

வீரர்காள்! வெல்லுவீர்!!

உணவு துறந்து துயில் மறந்து
 ஊரைக் காக்கும் வீரர்காள்
அனைத்துச் சொந்தம் பழுதற் றந்த
 அன்னை தந்தை மறந்துநீர்
இனிமை காத உடலி றப்பு
 அணையும் விட்டு இங்குளீர்
துணைய தாக நல்ல நாதன்
 தொடர்ந்து வருவான் வெல்லுவீர்

இளமை யின்பம் கற்கும் கல்வி
 யாவும் விட்டுப் போரிடக்
களம் இறங்கி நிற்கு முங்கள்
 கருமம் வெல்லும் சத்தியம்
களவும் பொய்யும் ஒழித்து நாட்டைக்
 காப்பீர் தம்மைப் பலியிலே
இளமை தவழ முருகன் துணையாய்
 இருக்க நீவீர் வெல்லுவீர்

வான ஊர்தி குண்டு வீசும்
 வந்த "ஷெல்"லும் வீழ்ந்திடும்
ஆன போதும் ஆவி வெண்ணி
 அகன்றி டாமல் நிற்கிறீர்
ஞான வேலன் நல்லைக் கந்தன்
 நண்ணு கின்ற மயிலிலே
சமர் கூட்டம் இரிந்து ஓட
 எய்தி நிற்பீர் வெற்றியே.

"குகன்"

கண்ணுக்கு உவமை குவளைப் பூ

பாவை அங்கம் ஒவ்வொன்றும்
பண்பால் மலரெனப் படுவதனால்,
பூவை என அழைக்கின்றோம்
பூக்களை இவர்களுடன் இணைக்கின்றோம்.

கண்ணுக் குவமை குவளைப்பூ;
கை, கால் உந்திக் கமலப்பூ;
பெண்ணின் நாசியோ எள்ளின்பூ;
மின்னும் கன்னம் ரோஜாப்பூ;

பல்லிற் குவமை முல்லைப்பூ;
பாதத்து மென்மைக்கு அனிச்சப்பூ;
வெண்டைக்காய் விரலோ காந்தள்பூ;
உடலின் அழகோ தாழம்பூ;

வெள்ளை உள்ளம் தும்பைப்பூ;
மகளிர் செவிமடல் சங்குப்பூ;
இதழோ சிவப்பு(ச்) செம்பருத்திப்பூ;
மோகக் குழலோ மனோரஞ்சிதப்பூவே!

தமிழ் பிரியன்

மரணமெனும் விளக்குமாறு

போரின் முகமே எனது முகம்
போரின் முகமே உனது முகம்
போரின் முகந்தான் என்ன நிறம்!
கறுப்பா, வெளுப்பா, பொதுநிறமா!

உலகைக் கூட்ட மரணமெனும்
விளக்கு மாறொன்(று) ஏந்துகிறேன்!
பலமாய்க் கட்டித் துடைக்கின்றேன்!
பச்சைக் குருதி ஒற்றுகிறேன்!

ஒழியாப் போரே இவ்வுலகில்
உன்னால் தொடக்கப்பட்டதனால்
பழியை உன்மேற் போடுகிறேன்!
பகைவா உன்னைத் தேடுகிறேன்!

ஆங்கிலமூலம்: Langstan Hughes
தமிழில்: சோ. பத்மநாதன்

பிரான்சில் வரலாறு படைத்த

வீரங்கனை ஜோன் ஒவ் ஆர்க்

இக்காலப் பெண்களுக்கும் பொருந்தும்

வரலாறு

ஆண் உழைப்புக்கும் பெண்கள் இல்லத்திற்கும் உரியவர்கள் என மேனாட்டுப்புலவர் ஒருவர் பாடியிருக்கிறார். 'Men for the field and Women for the hearth' தமிழ் பெண்களும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் உயர்வு தாழ்வு பாராது படித்து வீர உணர்வுள்ளவராகத் திகழ்ந்துள்ளனர். காலம் பெண்டு, குறத்தி என்போரை அக்காலத்தில் படித்துப் பாடல்கள் இயற்றியிருக்கிறார்கள். இடைக்காலத்தில் பெண்கள் வீட்டுக்குரியவரெனவும் ஆண்கள் நாட்டுக்குரியவரெனவும் நடைமுறை இருந்தது.

தேச விடுதலைக்காக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பிரான்சிய பெண் ஒருவள் நாடு காக்கப் புறப்பட்டுத் தியாகத்தீயில் கருகி மாண்ட செயல் படிப்போரை ஈர்க்கவல்லது. பல ஆண்டுகளுக்கு முன்னர் எமது பாடசாலைகளில் ஜோன் ஒவ் ஆர்க் வீரச் செயல் படித்தறியும் பாட நூலாக இருந்தது சினிமாப் படமாகவும் அந்த வீரவரலாறு, தியாக வரலாறு இங்கு காண்பிக்கப்பட்டது.

நாட்டு விடுதலைக்காக எத்தனையோ உயிர்கள் பலியாகி வருகின்றன. நமது நாட்டில் மட்டுமல்ல ஏனைய நாடுகளிலும் இத்தகைய உயிர்ப் பலிகள் நாளாந்தம் நடக்கின்றன. மக்கள் இவ்வுலகில் இருக்கும் வரை — சர்வாதிகார ஆட்சிகள் இருக்கும் வரை, மண்ணாசை இருக்கும் வரை போர் நிகழ்ந்தே தீரும். தான் பிறந்த மண்ணை நேசித்து அந்த மண்ணின் மீட்புக்காக அல்லும் பகலும் பாடுபட்ட தியாக மாமணி ஜோன் ஒவ் ஆர்க் என்னும் வீர இளம் பெண் எமக்கு உந்து சக்தியாகத் திகழ்கிறாள்.

பிரான்சு மிகப் பழமையான நாடு. அந்த நாட்டில் டாம்ரிமி என்னும் சிற்றூர் ஒன்று இருக்கிறது 1412ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ந் திகதி பிறந்தாள் ஆர்க். அவள் தந்தையின் பெயர் ஷாக்ஸ் தந்தை மிக ஏழை ஆடு, மாடுகளை மேய்த்துச் சீவியத்தை நடாத்தி வந்தான்.

வீட்டு நெருக்கடி, வேளைக்கு உணவு, உடை கிடைக்காத காரணத்தால் ஆர்க் பள்ளிக்கூடம் சென்று படிக்கவில்லை. வீட்டிலும் படிக்க வசதியில்லை. ஆனால் நாட்டுப் பற்றும், துணிவும், மன உறுதியும் அவளது இரத்தத்தோடு சேர்ந்திருந்தன. உடைகளைத் தைத்துக் கொடுப்பதிலும், உடைக்கான நூல்களை நூற்பதிலும் அவள் கூடுதலான கவனத்தைச் செலுத்தி வந்தாள்.

ஓய்வு நேரங்களில் வீட்டில் சோம்பியிருக்காது தன் தந்தைக்கு உதவியாக ஆடு, மாடுகளை மேய்த்து உதவி செய்து வந்தாள். ஆண்டவனை வேண்டிக் கொள்ளவும் அவள் தவறவில்லை அடிக்கடி ஆலயம் சென்று வந்தாள்

பிரான்சில், அந்நாட்டவருக்கும் ஆங்கிலேயருக்கும் 1485ம் ஆண்டில் யுத்தமொன்று உண்டாகியது. சும்மா இருந்த பிரான்சின்மேல் ஆங்கிலேயரே யுத்தமொன்றைக் கட்டவிழ்த்து விட்டனர். பிரான்சிலும் ஒரு பகுதி மக்கள் நாடுகாக்கப் புறப்பட இன்னொரு பகுதியினர் ஆங்கிலேயரோடு உறவு கொண்டாடினர். இரண்டுபட்ட பிரான்சியர் தமக்குள் தாமே மோதிக் கொண்டனர். இதற்கெல்லாம் அன்று ஆட்சியிலிருந்த சார்ல்சு பலவீனனே காரணமாக இருந்தான்.

அவனது ஆட்சி பலருக்கு வெறுப்பைக் கொடுத்தது இவர்களே ஆங்கிலேயருடன் சேர்ந்து மன்னனை ஒழித்துக்கட்ட முற்பட்டனர். இப்படிப் பிரான்சு நாடு இரண்டுபட்டிருந்தபோது ஜோன் ஒவ் ஆர்க்கிற்கு வயது பதின்மூன்றாகும்.

ஆங்கிலேயர் படையை என்ரி என்பவன் வழி நடத்தி பிரான்சில் டாம் ரீமி என்ற ஊரைத் தாக்கினான். ஆங்கிலேயப் படைகளோ யுத்தத்திற்கு வந்த மக்களைக் கொலைசெய்தும், மக்கள் உடைமைகளைக் கொள்ளையடித்தும், வீடுகளுக்குத் தீ வைத்தும் படுபாதகச் செயல்களைச் செய்தனர். பிரான்சு நாடு அல்லோலகல்லோலப்பட்டது. எங்கும் அழுகுரல்! எங்கும் பிணக்குவியல்! குருதி வெள்ளம்! போரில் காயமடைந்தோர் தமக்கு உதவுவாரின்றி, காயத்திற்கு மருந்துகட்டுவாரின்றிக் கதறிக் கதறி மாண்டனர்.

இந்தக்கொடுமைகளைக் கண்ட இளம் ஆர்க் உள்ளம் நெகிழ்ந்தது ஆர்க் கண்ணீர் வடித்தாள்.

புத்தொளி

"என் நாட்டவர் என்று இன்பம் காணப்போகின்றனர்?". என்று ஆண்டவனை வேண்டினாள். தீயோர் செயல் தீய்ந்து போக ஆண்டவனிடம் மன்றாடினாள்.

"பிரான்சு நாடு உன்னால் நன்மையடையும்: பகைவர் அழிவர்" என்ற தெய்வக் குரலொலி அவள் காதுகளில் கேட்டது. இக்குரலைக் கேட்டு அவள் ஆச்சரியமடைந்தாள். நடு நடுங்கினாள். என்னால் பிரான்சு நாடு நன்மையடையுமா? அது எப்படி? என்று எண்ணியவாறு நின்றாள். முன் தெய்வ ஒளி காட்சியளித்தது

இக் காட்சியில் அவள் களித்தாள். தெய்வவாக்கும், தெய்வக்காட்சியும் அவளைச் சிந்திக்கவைத்தன. பிரான்சு நாட்டில் தலைவிரித்தாடிய அக்கிரமத்தை, அராஜகத்தை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த அவள் சங்கற்பம் செய்தாள். தன்னை மறந்து, தன் வாழ்வை, தன் குடும்பத்தை மறந்து தன் மக்களின் இன்ப வாழ்வுக்காக, சுபிட்ச வாழ்வுக்காக உழைக்க முடிவு செய்தாள். தெய்வத்தின் அருளினால்தான் நாட்டு விடுதலைக்குப் போராடி அதில் வெற்றி வாகை சூட முடியுமென்று நம்பினாள். 'நம்பினார் கெடுவதில்லை; இது நான்கு மறைத் தீர்ப்பு'! அவள் சில நாட்கள் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் போது அவளுக்கொரு அழைப்பு வந்தது.

(வளரும்)

சிந்தையை மகிழ்விக்கும் தியானம்

அது ஆன்மஈடேற்றத்தையும் தரும்

- பௌராணிக வித்தகர் வ: குகசர்மா -

சமயம்

உயர்ந்த ஞான மார்க்கத்தில் மாத்திரமல்ல, சாதாரண மனிதரும் நாடொறும் இறைவனுக்குச் செலுத்தும் வணக்கத்தில் இறைவனுடைய சிந்தனை மனதில் இல்லையென்றால் அவ்வணக்கத்தால் பிரயோசனம் ஒன்றுமில்லை.

இறைவன் அடியை அல்லது உருவம் முழுவதையும் சிந்திப்பது 'தியானம்' இது ஞான மார்க்கத்தில் ஒன்றாகும். 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகுசிவஞானம்" என்று இதனைச் சேக்கிழார் கூறினார். இது அட்டாங்க யோகங்களில் ஒன்றெனவும் கூறுவர்.

ஒருவனுக்கு மோட்சமடைய குருவருள் முதலிய சாதனங்கள் எல்லாமிருந்தாலும் மோட்சமடையும் மன ஆர்வம் இல்லாவழி மற்றக் காரணங்கள் செயலற்றுப் போகும் என உபநிடதங்கள் கூறுகின்றன அதுபோல வாய் வாழ்த்தலிலும் சென்னி தாழ்த்தலிலும் நெஞ்சில் நினைப்பில்லாவிட்டால் இந்தப் புறவணக்கங்கள் பலனளிக்கமாட்டா. சரியை முதலிய எந்த நிலைக்கும் தியானம் அவசியமானதாகும்.

தியானம் எவ்வாறு அமையவேண்டும்? இதற்கு ஒரு பெரியார் கூறும் பதில், "பணப் பெட்டியில் உள்ள பணத்தை எண்ணும் போது மற்ற விவகாரங்களில் எண்ணம் செல்வதில்லை. அதுபோன்றது தியானம்''

வேதமோதினுலென்ன பேசினும், ஓதினும், வேள்விசெய்தாலென்ன? நீதிநூல்கள் பல பயின்றுமென்ன? ஈசனை மனதிலே நினைப்பவர்க்கன்றி மற்றையோர்க்கு இதனால் நன்மையில்லை என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு.

அருணகிரிநாதர் தனது திருப்புகழில் 'தவமுறை தியானம் வைக்க' அறியாத மூடரைப் பற்றிப் பாடுகிறார். ஆசை முதலிய குற்றங்களை நீக்குவதோடு புலனடக்கமும் தியானத்திறனும் துணையானது. ஆசை முதலிய குற்றங்கள் நீக்கப்பெற்ற உள்ளம் புறத்தில் பாதரசம் பூசி பாதுகாக்கப்பட்ட கண்ணாடி போன்றது அந்தக் கண்ணாடியில் நமது முகம் தெளிவாய்த் தெரிவது பாதரசம் பூசப்பெற்ற உள்ளக் கண்ணாடியிலும் இறைவனைத் தெளிவாகக் காணலாம்.

தெளிந்த மனது ஒருவனுடைய தெய்வக்கண் அந்தக்கண்ணாலே அவன் தெய்வத்தைக் காண்கிறான். அதனைச் சிந்தை செய்து அவற்றின் பலனைப் பெறுகிறான். "திருப்புத்தூரனைச் சிந்தை செயச் செயக் கருப்புச் சாற்றிலும் அண்ணிக்கும் காண்மினே'' என்பது நாவுக்கரசர் வாக்கு. ஈசனைத் தியானம் செய்வார் உள்ளத்து சோதியாய் நின்று கரும்புபோலவும், பாகுபோலவும் இனிமையைக் கொடுப்பான் இறைவன் என நாவுக்கரசர் பல இடங்களிலும் பாடியுள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினையில்

ஏனிந்தப் போக்கு?

டி. எஸ். சுப்பிரமணியம்

"வட இந்திய மாநிலங்களின் பிரச்சினைகள் குறித்து பதற்றமடைந்து தீர்வுகாணுவது போல் தென் இந்திய மாநிலங்களின் பிரச்சினைகள் குறித்து இந்திய அரசு பதற்றமடைவதில்லை

"தமிழருக்குப் பதிலாக இந்திய மாநில மக்களில் ஒரு பிரிவினர் இன்று இலங்கையில் அடக்கு முறைக்கு ஆளாகி இருந்தால் இந்தியா தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்து இருக்கும்'' —

இப்படிக் கூறியவர் வேறுயாரும் அல்லர்; இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன்.

இலங்கைத் தமிழரின் அபிலாஷைகளை சரியான முறையில் இந்திய அரசு புரிந்து கொள்ளவில்லை என்றும் திரு வெங்கடேஸ்வரன் கவலைப்பட்டிருக்கிறார்.

இலங்கை பற்றிய இந்திய வெளியுறவுக் கொள்கையில் நம்பகத்தன்மை கிடையாது; தொடர்புத் தன்மையும் கிடையாது; திடீர் தீர்வுகளுக்குத்தான் இந்திய அரசு முயற்சித்து வந்தது — திரு. வெங்கடேஸ்வரனின் மதிப்பீடு இது.

இது குறித்து இலங்கைத் தமிழரின் பிரதிபலிப்பு எப்படி அமைந்துள்ளது?

இதை இலங்கைத் தமிழ்த் தலைவர் ஒருவர் பின்வருமாறு மதிப்பிடுகிறார்.

"நாம் தொடர்பு கொள்ளக் கூடியதாக இலங்கை இனப்பிரச்சினை குறித்து முழு அறி

(6 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய நல்லுறவைச் சம்பாதித்த பண்டா

தமிழர் மீது ஒடுக்கு முறைகளைக் கட்டவிழ்த்தார்

உதயன் - விஜயன்

அரசியல்

இலங்கைப் பிரச்சினையும் இந்தியாவும்

1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் மூலம் ஒன்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சியில் இருந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடிக்கப்பட்டு, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது.

பண்டாரநாயக்கா ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை பெரும் மாற்றத்துக்கு உள்ளானது.

பண்டாரநாயக்கா திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கொண்டவர் அல்லர். அவர் அந்நியக் கம்பனிகளையும் பெருந்தோட்டங்களையும் போக்குவரத்தையும் தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்தார். இவை அனைத்தும் ஏகாதிபத்திய அரசுகளின் கைகளில் இருந்தமையினால் பண்டாரநாயக்கா மேற்கத்திய ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகக் காணப்பட்டார். ஆனால் இம்முயற்சியில் அவர் எதிர்பார்த்த அளவு வெற்றியை அடையவில்லை.

பண்டாவின் வெளியுறவுக் கொள்கை

இதனால் பண்டாரநாயக்காவின் வெளியுறவுக் கொள்கை மேற்குத் தேசம் சார்பிலிருந்து திசை திரும்புவதாக அமைந்தது. மேலும் பண்டாரநாயக்கா சோவியத் யூனியன், சீனா போன்ற சோஷலிச நாடுகளுடனான உறவை வளர்த்தார். இவ்வாறு இவர் உறவை வளர்த்தமையால் இந்த நாடுகளின் பக்கம் இலங்கை சார்ந்து விட்டதென்றில்லை.

இதைத் தவிர இந்தியாவுடன் நல்லுறவை வளர்த்தமை, பண்டாரநாயக்காவின் கொள்கையில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. உண்மையில் பண்டாரநாயக்கா இலங்கையின் புவிசார் அரசியற் போக்கை சரிவர விளங்கி இருந்தார். இதனால் இந்திய எதிர்ப்புக் கொள்கையின் விளைவை நன்கு உணர்ந்திருந்தார். இதன் அடிப்படையில் நேருவுடன் கைகோர்த்து நல்லுறவை வளர்த்தார். நேருவின் வெளியுறவுக் கொள்கையை அங்கீகரித்து அதனைத் தானும் கைக்கொண்டார்.

இந்தியாவின் அதிருப்தி

இவ்வாறு பண்டாரநாயக்கா இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்க வல்ல உறவைக் கடைப்பிடித்த காலத்தில் தமிழ் மக்களின் முக்கிய தலைமைக் கட்சியாகிய சமஷ்டிக் கட்சி (தமிழரசுக் கட்சி) மேற்குத் தேச ஏகாதிபத்தியத்தின் விருப்பத்திற்கு உகந்த கொள்கையைக் கடைப்பிடித்தது. இலங்கையில் இருந்து பிரித்தானிய படைத்தளம் அகற்றப்படக்கூடாதென்பது தமிழரசுக் கட்சியின் வேண்டுகோளாக இருந்தது.

அதேவேளை சி. சுந்தரலிங்கமும் இவ்வாறு தளம் அகற்றப்படுவதை எதிர்த்தார். எஸ். ஜே. வி. செல்வநாயகமும் சி. சுந்தரலிங்கமும் இவ்வாறு தளம் அகற்றப்படக்கூடாது என்பதற்காகக் கூறிய முக்கிய காரணம், பிரித்தானிய தளம் அகற்றப்பட்டால் சிங்கள ஆட்சியாளர் தமிழரை இலகுவில் ஒதுக்கி விடுவர் என்பதாகும்.

தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதத்தால் ஒடுக்குமுறைக்கு உட்பட்டு வருபவர்கள் என்ற வகையில் அச்சமும், அதன் பொருட்டான பாதுகாப்பைத் தேடலும் இடம்பெறுவது இயற்கை ஆகும்.

ஆனால் அந்தப் பாதுகாப்புக்காக ஏகாதிபத்தியத்திடம் கையேந்தியமை தவறாகும். எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் இந்த நிலைப்பாடும், சுந்தரலிங்கத்தின் நிலைப்பாடும் இந்திய இராஜதந்திரிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதேவேளை பண்டாரநாயக்காவின் வெளியுறவுக் கொள்கை இந்தியா [illegible] ஏற்படுத்தி இருக்கும்.

வெளியுறவுக் கொள்கை உண்மையில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையாகவே அமைந்தது இவர் பதவிக்கு வந்ததும் இலங்கையில் இருந்த பிரித்தானிய கடற்படை, விமானப்படைத் தளங்களை நீக்கினார். இதன் மூலமாக இந்திய ஆட்சியாளரின் நன்மதிப்பைப் பெற்றார் 'இந்தியா போன்ற நாடு இலங்கையைத் தன்னுடன் இணைக்குமென்று சரியான அறிவுள்ள எந்தவொரு மனிதனும் கற்பனை செய்யமாட்டான்' — என்று 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி பண்டாரநாயக்கா குறிப்பிட்டார். இந்தவகையில் இந்தியாவின் மீதான இலங்கையின் அச்சத்தைப் போக்கவும் இந்தியாவின் நன்மதிப்பைப் பெறவும் [illegible] இலங்கை இந்திய உறவை ஐ. தே. கட்சி மிகத் தாழ்நிலைக்குக் கொண்டுவந்திருந்த சூழ்நிலையில் கொத்தலாவலையின் ஆத்திரமூட்டக் கூடிய நடவடிக்கைகள் பெரிதும் வளர்த்திருந்த சூழலில் இலங்கையை இந்தியா தன்னுடன் இணைக்க வேண்டுமென்ற கருத்துப் பெரிதும் தலையெடுத்த சூழ்நிலையில் பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தார்

பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்ததும் இலங்கை சம்பந்தமான உறவில் இந்தியா மாறிய போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. இலங்கையை இந்தியாவுடன் இணைத்தல் என்ற கருத்துக்கு நேரு முக்கியத்துவம் கொடுக்காமல் இலங்கையை இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் உட்படுத்தும் திட்டத்தை அவர் கைக்கொண்டார். இத்தகைய கொள்கைப் பாங்கின் அடிப்படையில் இலங்கை இந்திய உறவு நன்னிலையை அடைந்தது.

இவ்வாறு இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்து இந்தியாவின் நன்மதிப்பைச் சம்பாதித்த பண்டாரநாயக்கா அதே வேளை மறுபக்கம் இலங்கைத் தமிழ்மக்கள் மீது இனரீதியான ஒடுக்கு முறைகளை மேற்கொண்டார்.

ஒருபுறம் இந்திய மத்திய அரசுடன் நல்லுறவை வைத்துக்கொண்டு மறுபுறம் தமிழ் பேசும் மக்களை ஒடுக்குவதில் சில சாத்தியப்பாடுகள் இருந்தன. ஆனால் ஓர் எல்லைக்கு உட்பட்ட ஒடுக்குதலாகவே அது அமைய முடிந்தது. மாறாக இந்திய மத்திய அரசின் எண்ணத்தை மீறிச் செயற்படக் கூடிய அளவிற்குக் கணிசமான அளவு பலத்தைக் கொண்ட தமிழ் மக்கள் தென்னிந்தியாவில் வாழ்ந்தனர், எவ்வாறாயினும் இந்திய மத்திய அரசால் 1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது ஓர் எல்லையை மீறி மௌனமாக இருக்க முடியவில்லை.

சீன - இந்திய யுத்தம்

பண்டாரநாயக்காவின் மரணத்தின் பின்பும் அவரது கட்சியே பதவிக்கு வந்தமையால் அவரது வெளியுறவுக் கொள்கையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டது 1962 ஆம் ஆண்டு சீன-இந்திய யுத்த சம்பந்தமாக இலங்கை அரசு கடைப்பிடித்த போக்கு இந்தியாவுக்குத் திருப்தி அளிக்கவில்லை. சீன-இந்திய யுத்தத்தில் சீனாவை இலங்கை கண்டிக்காமையை எண்ணி இந்தியா கவலை அடைந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசு கடைப்பிடித்த இந்த 'நடுநிலைப்' போக்கானது இந்திய ஆட்சியாளர் மத்தியில் இலங்கை மீதான சந்தேகத்தை உருவாக்கியது

இந்த யுத்தத்தில் ஐக்கிய தேசியக்கட்சி சீனாவைக் கண்டித்து இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. தமிழரசுக்கட்சி சீனாவைக் கண்டித்து இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்ததுடன் தேவை ஏற்படின் தாம் ஒரு தொண்டர் படையைத் திரட்டி இந்தியாவுக்கு உதவப்போவதாகவும் கூறியது. இலங்கை அரசின் நடவடிக்கை இந்தியாவுக்குத் திருப்தியைக் கொடுக்காத போதிலும் இலங்கை அரசுடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கேட்டாரைப் பிணிக்கும் பேச்சுவன்மை

பண்டிதமணி அவர்களின் பிறவிக்கொடை

ஒரு சபையில் இருப்பதற்குத் தக்க பழக்கத் தெரிந்தவர் நூறு பேருள் ஒருவராகவும், நல்ல புலமை வாய்ந்தவர் ஆயிரவருள் ஒருவராகவும் இருப்பர் என்று கூறவந்த ஔவையார் பதினாயிரவருள் ஒருவரே சொல்லாற்றல் வாய்ந்தவராயிருப்பர் என்று சொன்னார்.

பேச்சாற்றலில் பெயர் எடுத்த பண்டிதமணி அவர்கள் கேட்டாரைப் பிணிக்கும் தன்மையில் பேசியவர். அவரின் பேச்சுவன்மை அவருக்கு இயல்பாயமைந்த பிறவிக் கொடை. அவர் கலாநிலையக் கூட்டங்களிலும், வாலிப மாநாட்டு விழாக்களிலும், சங்கங்கள் சபைகளின் ஆண்டு விழாக்கூட்டங்களிலும் பேசிய பேச்சுக்கள் படித்தவர், படியாதவர் என்றிருதிறத்தாரின் மேலும் பெருமளவில் பாராட்டப் பெற்றவை.

இலகுவான நடையில் எவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் அவர் எடுத்துக்கொண்ட விடயங்களில் மணிக்கணக்காகப் பேசியவர். அவருடைய பேச்சுக்களினிடையே நகைச்சுவை ததும்பும், கண்டனக் குரல் எழும்பும். அவர் என்ன பேசினார் என்பதைக் கவனித்த சபையோர், அவர் எப்படிப் பேசினார் என்றெண்ணி அங்காந்தவாறே யிருந்து கேட்பர்.

தமிழிலக்கியத்திலே அகம், புறம், களவு, கற்பு, ஊடல், கூடல் என்பன பற்றி விளக்கும்போது அவரின் பேச்சொழுக்கு ஆற்றின் போக்குப்போல் பாயும். சைவத் துறையில் அவர் பசும்போது, தருமம், பற்று என்பன பற்றிக் குறிப்பிட்டு, அவற்றை விடுவிக்கும் போது அவர் கேட்போரை மெய்மறக்கச் செய்து, ஆழமான இடத்துக்கு இழுத்துச் செல்வர். அவர் பேச்சில் இருக்க வேண்டிய ஆழத்தை நீளத்தால் நிரப்பத் தெரியாதவர்.

இன்று நாடெங்கும் நல்ல பேச்சாளர் பலர் நாவன்மையோடு பேசிச் சொல்லின் செல்வர் என்று பெயரெடுக்கிறார்கள். சென்ற நூற்றாண்டிலே நாவன்மையோடு பேசி நாவலர் என்று பெயரெடுத்தவர் நல்லைநகர் ஆறுமுகநாவலர் அவர்கள். நாவலர் அவர்களுக்கு முன் கிறிஸ்தவ பாதிரிமார் விவிலிய நூற் கதைகளை சனரஞ்சகமாகப் பெய்து பொது மக்களிடையே மிக வருமையாகப் பேசியவர்கள். நாவலரவர்கள். தம்

பண்டிதமணி
(வரலாறும் காலமும்)

காலத்தில் தமது இருபத்தைந்தாம் ஆண்டுப் பராயத்திலேயே அற்புதமாகப் பேசத் தொடங்கினார். அவர் சபாப்பிரசங்கசிங்கம் எனவும் பெயர் பெற்றவர்.

நாவலர் அவர்கள் ஒலி பரப்புவ வசதிகள் இல்லாத காலத்தில் ஆயிரக்கணக்கானோர் எளிதிற் கேட்கும் அளவில் பேசியவர். அவர் வழியில் அம்பலவாணநாவலர், நா. கதிரைவேற்பிள்ளை, சுவாமிநாத பண்டிதர் முதலானவர்கள் பேசினார்கள். தமிழ் நாட்டில்

ஆழ்ந்த சிந்தனையும் கலையாற்றலும் தொனிக்க உரைநிழ்த்த வல்லவர்

திரு. வி. க. அவர்களின் பேச்சாற்றலுக்கு வழிகாட்டி மேம்பட்டவர் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களே தான். நாவலர் பரம்பரையில் வளர்ந்த நல்ல தமிழ்ப் பேச்சாளராய சபாபதி நாவலர், செந்திநாதையர் முதலானவர்களின் பேச்சைக் கேட்டுருகிய தமிழ் நாட்டவர் பலர், இடையிடை யாழ்ப்பாணம் வந்திருந்தும் கேட்டுப் போனதொரு காலம் தமிழ்க்காலம். சுவாமிநாதபண்டிதர் அவர்களின் பேச்சைக் கேட்ட நாட்டுக் கோட்டைச் செட்டிமார் ஆயிரமாயிரமாகக் குவித்த வெண்பொற்காசு சுவாமிநாத பண்டிதர் அவர்கள் தமிழ்நாட்டிலேயே சைவ வித்தியாசாலைகள் நிறுவுவதற்குப் பயன் செய்தது.

இத்தகைய பாரம்பரியத்திலே பேசத் தொடங்கிய பண்டிதமணி அவர்கள் ஐம்பத்தேழு ஆண்டுகளாகத் திருநெல்வேலியில் வாழ்ந்தபோது, அயலூர்களிலும் உள்ள பாடசாலை, திருக்கோவில்கள், சனசமூக நிலையங்கள் ஆகிய இடங்களில் பரவலாகப் பேசியவர். திருநெல்வேலியின் பழமைக்கும் புதுமைக்கும் பெருமைக்கும் பெருமதிப்புக் கொடுத்துப் பேசி வந்த அவர், அவ்வூரினரின் நல்வாழ்வுக்கு வித்திட்டவர். அவர்கள் இவர் வரவால் தங்கள் ஊர் பெருமை பெற்றது என்றும், இவரின் நிழலில் தாங்கள் நல்லவர்களாய் உருப்பெற்றோர்கள் என்றும் போற்றுவர்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி இந்து வாலிப சங்கத்தார் பாரதி விழாக் கொண்டாடிய வேளையில், பண்டிதமணி அவர்களைப் பேசவைத்தார்கள். சைவவித்தியாசாலை மண்டபத்தில் பண்டிதமணி அவர்கள் பேசியபோது, பாரதியாரின் புலமையை அலசி ஆராய்ந்து ஆக்கபூர்வமாக விமரிசனஞ்செய்து, அவர் தொல்காப்பியர் வகுத்த வரம்புகளிலிருந்து என்ற பகுதிக்கு இலக்கியம் படைத்தவர் என்று நயம்பட விளக்கினார்.

பாரதியாரின் தின்னப் பழங்கொண்டு தருவான் என்னும் பாடலைத் தொட்ட பண்டிதமணி அவர்கள் பிராரத்த வினையில் தோய்ந்து தெய்வச்சொல்லை விளக்கி, ஔவையாரின் "ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும்" என்னும் பாடலையும் கூறியமையை இன்றும் தான் பலர் பாராட்டுகிறார்கள்.

'பண்டிதர்கள் பேசினால் பாமரர்கள் ஒன்றும் புரியாமல் திண்டாடுவதுதான் வழக்கமாயிருந்தது. புரியும்படி பேசுவதே பண்டிதர்களுக்கு அழகு என்ற நிலை இருந்த காலத்தில் அதனை மாற்றியமைத்த பெருமை பண்டிதமணி அவர்களையே சார்ந்ததாகும். இலகுவில் கிரகித்துக்கொள்ள முடியாத வரண்ட தத்துவங்களையும் எல்லோரும் அறிந்து கொள்ளும் முறையில் பேசுகின்ற பெருமை பண்டிதமணி அவர்களையே சாரும். தகுந்த கதைகள் மூலம் உண்மைகளை யாவரும் அறியும் வண்ணம் செய்து விடுவார்கள். அவருடைய பேச்சைக் கேட்கின்றவர் உள்ளத்தில் சலிப்பே உண்டாகாது. பொதுக் கூட்டங்களில் தலைமை தாங்கி முன்னுரையும் தலைமைப் பேருரையும் செய்வதில் பண்டிதமணி அவர்களுக்குச் சமசமமானவர் ஒருவரைக் காண முடியாது. அவர் பேசும் போது கருவன அவரின் ஆழ்ந்த சிந்தனையையும், கலையாற்றலையும், சமயப் பற்றையும் தெளிவாகக் காட்டும்.

பண்டிதமணி அவர்களின் பேச்சைச் சுவைக்கச் செய்த கதைவகையில் கயிறு பாம்பு விட்ட கதை, முதலை புளியம் வேரைப் பிடித்தகதை, ஓவியர் மொழிகள் போட்ட கூலி கொடுத்த கதை, ஐயர் ஒருவர் இறைவரசன் கதை மகிமைத்த கதை முதலானவை அவ்வப்போது அவர் இடம் நோக்கிக் கூறியவைகளாம்.

க. சி. குலரத்தினம்

சின்னத்தம்பிப் புலவரைப் பற்றி அவர் பேசிய வேளைகளில் புலவரின் தந்தையார் புகையிலைச் சப்பும் பழக்கத்தில் அதனை கரையில் சொருகி வைப்பவர் என்றும், அதனைத் தேடியெடுத்து இளைஞரான சின்னத்தம்பியும் சப்புபவர் என்றும், அப்படியாகத் தேடிய சந்தர்ப்பத்திலேதான், அரைகுறையாக எழுதிய ஏடும் எழுத்தாணியும் அகப்பட, இளைஞன் பாட்டைப் பூர்த்தி செய்தான் என்றும் பண்டிதமணி அவர்கள் கதையை விரிக்கும் போது கேட்போர் கொள்ளும் உற்சாகம் தனியானதாகும்.

பண்டிதமணி அவர்கள் பேசும் போது, சிலசமயங்களில் காரசாரமான கண்டனங்கள் செய்வதும் வழக்கம். தங்க நிறமான முகம் குங்கும நிறமடையுமளவில் அவரின் மெய்ப்பாடு உண்டாவதும் வழக்கம். ஒரு சமயம் அவர் பேசியபின் ஆறியிருந்த போது அவரை அணுகி, ஏன் இவ்வாறு கண்டனஞ் செய்தீர்கள் என்று கேட்டபோது புன்முறுவல் பூத்து, "அப்பனே! அது என்னுடைய பிழையல்ல, என் இரசனையின் வேலை" என்றார்.

எல்லை ஆளும் இரசனைகளின் வேலைகள் ஆகியவைப் பெரும் புலவரான சேக்ஷ்பியரும் தமது யூலியஸ்சீசர் நாடகத்தில், காசியஸ், புருட்டஸ் உரையாடலில் அழகாகக்கூறியுள்ளார். "என் உயிர் போன்ற புருட்டஸ்! நாங்கள் சிறிய அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்தால் எங்கள் பிழையல்ல, அது எங்களுக்குள் இரசனைகளின் பலனேயாகும்" என்பது சேக்ஸ்பியரின் கருத்து.

பண்டிதமணி அவர்களின் சாதகம் பொய்க்கவில்லை. ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன் எழுதப் பெற்ற அவருடைய சாதகத்தில் லக்கினத்திற்கு இரண்டாமிடமும் நவாம்சத்தில் லக்கினத்திற்கு இரண்டாமிடமும் சராசரியாக இருப்பதால் அவர் தமது சந்நிதியில் பேச்சாற்றல் உள்ளவராயினர். அன்றிப் பெரியவர்கள் பாராட்டவும் இடம் நோக்கி அமைவாகப் பேசவும் அவர் ஆற்றல் பெற்றிருந்தமை புதனுக்குரிய அஷ்டவர்க்கப்பரல்கள் காரணமாக அவர் காரசாரமான கண்டனங்கள் செய்தார் என்றும், செவ்வாயின் செல்வாக்குக் காரணமாகவே அவர் குத்தல், கிண்டல், கண்டனங்கள் தீர்த்தமாயிருந்தன என்றும் அவை தர்க்க முடியாத அவையில் தர்க்கரீதியாக அமைந்தன என்றும் அறியக்கிடக்கின்றன.

(வளரும்)

விளையும் பயிரை முளையில் தெரியும்

இப்போது ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்குப் படுக்கை வசதி இருக்கின்றது. நல்ல காற்றோட்டம் இருக்கிறது. நோயாளிகளைக் கவனிக்க தாதிகள் இருக்கிறார்கள்; அங்கேயே உணவு கொடுக்கிறார்கள். இன்னும்பல வசதிகள் செய்துகொடுக்கிறார்கள்.

ஆனால் நூறு ஆண்டுகளுக்கு முன்னால், இந்த மாதிரி வசதிகளையெல்லாம் ஆஸ்பத்திரிகளில் காணமுடியாது.

இருட்டு அறைகளில் நோயாளிகளைப் போட்டு வைப்பார்கள். சரியாகக் கவனிக்கமாட்டார்கள்.

ஆஸ்பத்திரிக்குப் போனாலே சுடுகாட்டுக்குப் போனதுபோலத்தான்!

அந்தக்காலத்து தாதிகளுக்குப் படிப்பு வாசனை கிடையாது. அவர்களில் அநேகர் மிகவும் கேவலமாக நடந்துகொள்வார்கள்.

நோயாளிகளிடமுள்ள பொருள்களை திருடிக் கொள்வார்கள். நோயாளிகளைக் கொடுமைப்படுத்துவார்கள். மது அருந்துவார்கள்.

இப்படிப்பட்ட காலத்தில் யாராவது தாதிகளுக்கு மதிப்புக்கொடுப்பார்களா?

தாதிகளைக் கண்டாலே சிலர் நையாண்டி செய்வார்கள்; சிலர் தலையிலடித்துக்கொள்வார்கள்.

தாதிகள் என்றாலே மிகவும் மோசமானவர்கள் என்று நினைக்கும் அந்தக் காலத்தில் ஒரு சிறுமி தாதியாகவேண்டும் என்று நினைத்தாள்.

நினைத்த தோடல்ல; தாதியாகவே நடித்தும் வந்தாள்.

அவள் சாதாரணச் சிறுமியல்ல; பணக்காரச் சிறுமி! கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி!

அவள் விளையாடும் பொம்மைகளை வைத்து விளையாடுவதே வேடிக்கையாக இருக்கும்.

மாப்பிள்ளை பெண் விளையாட்டோ, சாமி விளையாட்டோ விளையாடமாட்டாள். அந்த பொம்மைகளை நோயாளிகளாக வைத்து விளையாடுவாள்.

படுக்கைகள் தயாரித்து அந்தப் பொம்மைகளை அவற்றில் படுக்கவைப்பாள். பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு கருத்துடன் அந்த 'நோயாளி'களைக் கவனிப்பாள்.

இந்தக் காட்சியைக் காணும்போதெல்லாம் அவளுடைய அக்காளுக்குக் கோபம் வரும். கோபத்தில் அவள் அந்த நோயாளிப் பொம்மைகளைத் தூக்கி வீசியெறிந்து விடுவாள்.

பாவம் அந்தச் சிறுமி அழுதுகொண்டே ஓடிப்போய் அந்தப் பொம்மைகளை எடுத்துக்கொண்டு வருவாள்.

ஐயோ உனக்கு இந்தக் கையில் அடிபட்டு விட்டதா? அந்தக் காலில் அடிபட்டுவிட்டதா? என்று கேட்டுக்கொண்டே அந்தப் பொம்மைகளுக்குக் கட்டுக்கட்டுவாள்.

இப்படிச் சிறுவயதிலேயே தாதியாக நினைத்த அந்தச் சிறுமிதான் பெரியவளானதும் ஆஸ்பத்திரிகளும், தாதிகளும் முன்னேறப் பெரும்பாடு பட்டாள்.

அவள் இல்லாவிட்டால் இப்போது இருக்கும் நிலையில் ஆஸ்பத்திரிகளையோ, தாதிகளையோ காணமுடியாது.

இவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்த அவள் யார்?

புளோரன்ஸ் நைட்டிங்கேல் என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்த அம்மையார்தான் மேலே கூறப்பட்ட சிறுமி!

✶

அறிந்துகொள்ளுங்கள்

அமெரிக்காவிலுள்ள சுதந்திர சிலையின் உயரம் என்ன தெரியுமா? (151 அடியாகும்)

செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவர் யார் தெரியுமா? (சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்றி டூனன்ட் என்பவர் ஆவார்)

சுயெஸ் கால்வாயின் நீளம் என்ன? (165கிலோ மீற்றராகும். இது எகிப்து நாட்டுக்குச் சொந்தமானதாகும்)

சீனப் பெருஞ்சுவரின் நீளம் யாது? (2,400 கிலோமீற்றராகும்)

ஆபிரிக்காவிலுள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சியின் விசேஷம் என்ன? (நீர்வீழ்ச்சியின் எழும் இரைச்சல் 80 கிலோ மீற்றர் தூரத்திற்குக் கேட்கின்றதாம்)

உலகிலேயே மிக உயரமான சிகரம் எது? அதன் உயரம் என்ன? (எவரெஸ்ட் சிகரம் 29,156 அடி.

உலகிலேயே அதிக மழைவீழ்ச்சியைப் பெறும் பிரதேசம் எது? (அமெசன் பள்ளத்தாக்குப்பகுதியாகும்.

கண்ணாடி எதிலிருந்து செய்யப்படுகிறது தெரியுமா? (சிலிக்கா என்னும் ஒருவகை மண்ணிலிருந்துதான்)

நாம் வாழும் பூமியின் விட்டம் யாது? (கிழக்கு, மேற்கான விட்டம் 7,926 மைல்களாகும். அதன் வடக்குத் தெற்கான விட்டம் 7,900 மைல்களாகும்)

நதிகளில் புனிதமான கங்கை நதியின் நீளம் என்ன? (1554 மைல்களாகும்.

தொகுப்பு: அன்ரன் ஜெரூட்
(பனை மகாவித்தியாலயம்)

— தயாரிப்பு: ஸ்ரீ —

முயன்று பாருங்கள்

4					✶
				5	✶
7		5			✶
				5	✶
4					✶

நீங்கள் செய்யவேண்டியது இதுதான். மேலுள்ள சதுரங்களில் வெறுமையாக விடப்பட்டுள்ளவற்றில் எண்களையிட்டு மேலிருந்து கீழ் நோக்கிக் கூட்டினாலும் 25 வரவேண்டும். இடமிருந்து வலமாகக் கூட்டினாலும் 25 வரவேண்டும்.

கடந்தவாரம் வெளியான முயன்றுபாருங்கள் பகுதிக்குரிய விடைகள்:-

இடமிருந்து வலம்	மேலிருந்து கீழ்
1. சந்திரன்	1. சர்ப்பம்
4. வலை	2. திலகம்
5. சுறன்	3. கள்வன்
6. பயம்	9. பனி
7. கனி	
8. பூ	

பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

குழந்தைகள் அடகு

காணி, நகை, பாத்திரங்கள் அடகு வைப்பதை அறிந்திருக்கிறீர்கள். குழந்தைகள் அடகு வைக்கப்படுவதை அறிந்திருக்கிறீர்களா?

இந்தியாவில் வேலூரில் இது நடைபெறுகின்றது.

குழந்தைகளை 200 ரூபா, 500 ரூபா என்று பீடித் தொழிற்சாலை முதலாளிகளிடம் அடகு வைக்கிறார்கள்.

வேண்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்படும்வரை அப்பணத்தின் வட்டிக்காகக் குழந்தைகள் பீடித் தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள்.

இரவில் தூங்குவதற்கு மட்டும் இவர்கள் சில வேளைகளில் வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள். சில இடங்களில் அதுவுமில்லை.

சில பிள்ளைகள் தொழிற்சாலைகளில் வேலைப்பளுவாலும், உணவுக் குறைவாலும் ரயில் தண்டவாளங்களில் விழுந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

சிலவேளைகளில் பிள்ளைகள் நோய்வாய்ப்பட்டாலும்கூட வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

சிலவேளைகளில் இறந்த பிள்ளைகளின் பிரேதங்கள் மட்டுமே அனுப்பி வைக்கப்படுகின்றன.

✶

மாமேதையின் பேச்சு

பிரபல விஞ்ஞானியான நியூட்டன் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இரண்டுமுறை உறுப்பினராக இருந்தார் என்பது பலருக்குத் தெரியாது.

இரண்டு தடவைகளும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமே அவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பியது.

நியூட்டன், நாடாளுமன்றத்தில் எதுவும் பேசியதே இல்லை.

ஓரே ஒரு சமயம் அவர் பேச எழுந்தார்.

மாமேதை பேசப்போகிறார் என்று கண்டதும் சபையோர் சற்றும் சந்தடி இல்லாமல் அமைதியாய் ஆர்வத்தோடு கேட்க ஆயத்தமானார்கள்.

நியூட்டன் பேசினார்.

'இதோ இந்த ஜன்னலை மூடுங்கள். ஓரே ஊதல் குளிர்காற்று இதன் வழியே வருகிறது' என்றார். உட்கார்ந்து விட்டார்.

✶

மீன்களும் பேசும்

மீன்களும் தங்களுக்குள் உரையாடல் நடத்திக் கொள்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சோவியத் நாட்டின் அறிவியல் அக்கடமியினர் நுண்ணிய அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தி மீன்களின் உரையாடல்களைப் பதிவு செய்துள்ளனர்.

மீன்கள் பேசும் திறன் அற்றவை என்று இதுவரை கருதப்பட்டது இதன் மூலம் பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

✶

எதிர்வருபொருள் அறிபுலன்

எதிர்வருபொருள் அறிபுலன் என்றால் என்ன தெரியுமா?

ரேடர் என்றும் ராடர் என்றும் அழைக்கப்படும் வேறு நாட்டு விமானங்களை இனங்காணும் சாதனத்தின் தமிழாக்கம் தான் இது!

இதனை முதன் முதலில் தமிழாக்கம் செய்த பெருமை லண்டன் பி. பி. சி. தமிழோசை தயாரிப்பாளரையே சேரும்.

✶

விபத்துக்களில் சாதனை

உலகிலேயே அதிகமான விபத்துக்கள் நடைபெறும் நாடு நைஜீரியா! 1982 முதல் 1985 1,27,300 விபத்துக்கள் நடந்திருக்கின்றன. இறந்தவர்களின் எண்ணிக்கை 40,000 ஆகும்.

✶

அபினுக்கு அனுமதி

மருத்துவ உபயோகத்துக்காக அபின் தயாரிக்க உலகிலேயே ஐக்கிய நாட்டு நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்ட ஒரே நாடு இந்தியாதான்.

✶

நகை நட்டு

பெண்கள் 'நகை நட்டு' என்பார்களே, கேட்டிருப்பீர்கள்.

நகை என்றால் தெரியும். நட்டு என்றால் என்ன என்று தெரியுமா?

கழுத்தில் அணிந்து கொள்ளும் பெரிய நகைகளுக்கு நகை என்று பெயர்.

மூக்குத்தி, கம்மல், கொலுசு போன்ற திருகாணி உள்ள சிறிய ஆபரணங்களுக்கு நட்டு என்று பெயர்.

இதைத்தான் பெண்கள் நகை நட்டு என்கிறார்கள்.

✶

பெண்கள் மட்டும் பணிபுரியும் நீதிமன்றம்

முற்றுமுழுதாகப் பெண்கள் மட்டுமே பணிபுரியும் நீதிமன்றம் ஒன்று இந்தியாவில் ஆந்திரா மாநிலத்தில் அமைக்கப்படவுள்ளது.

நீதிபதி, வழக்கறிஞர், பணியாளர்கள் உட்பட அனைவருமே பெண்களாகவே இருப்பார்கள்.

கற்பழிப்புப் போன்ற வழக்குகளில் ஆண் வழக்கறிஞர்கள் கேட்கும் கேள்விகளுக்குக் கூச்சப்படும் பெண்கள் பெண் வழக்கறிஞர்களிடம் கூச்சமின்றிப் பதில் கூற எளிதாகும் பொருட்டு இந்த நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளது.

பெண் நீதிபதிகள் முன் சாட்சி கூறுவதும் இத்தகைய சங்கடமான சூழ்நிலைகளில் பெண்களுக்கு உதவியாக இருக்கும்.

✶

விசித்திர உணர்வுகள்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடி இறப்பதற்கு மூன்று நாட்களின் முன் ஒரு இடுகாடு (சேமக்காலை) வழியாக செல்ல வேண்டி நேரிட்டது.

அந்த இடம் அவருக்கு பிடித்திருந்ததால் அந்த இடத்தில் காரை நிறுத்தி இறங்கிக் கொண்டார்.

'எனக்கு இங்கேயே நிரந்தரமாய்த் தங்கிவிடலாம் போலுள்ளது' என்று கூட வந்தவர்களிடம் கூறினார்.

அடுத்த மூன்றாம் நாள் குண்டடிபட்டு அவரது உடல் அதே இடத்தில் நிரந்தரமாக அடக்கம் செய்யப்பட்டது.

சிலருக்கு இத்தகைய உணர்வுகள் வருமுன்னே தோன்றுவதைக் காண முடிகின்றது.

✶

ரெலிபோன் டைரக்டரி கம்பியூட்டரில்

டோக்கியோ ரெலிபோன் டைரக்டரியில் 11 லட்சம் பெயர்கள் உள்ளன. சுமார் 4000 பக்கங்கள் 4 தொகுதிகளாக உள்ளன.

இவ்வளவு பெரிய டைரக்டரியை ஒரு சிறிய கம்ப்யூட்டர் டிஸ்கில் பதிவு செய்து விற்பனை செய்ய 'நிப்போன்' கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது.

வீட்டுக் கம்ப்யூட்டரில் இந்த டிஸ்க்கைப் போட்டு பெயரை ரைப் செய்தால் உடனே அவருடைய விலாசம், வேலை, தொலைபேசி இலக்கம் முதலியவற்றைக் கம்பியூட்டர் தெரிவித்து விடும்.

✶

இடைவெளி இல்லாத மணி ஒலி

15 ஆம் லூயி மன்னன் இறந்தபோது பிரான்ஸ் நாட்டின் டோல் நகர தேவாலயமொன்றில் கோவில் மணி 40 நாட்கள் தொடர்ந்து அடிக்கப்பட்டது.

மணியின் ஒலி அதிர்வு முழுவதும் அடங்க பல வருடங்கள் சென்றன.

✶

ஆரோக்கியம் வாய்ந்த நூல் அறிமுகம்

வாசகரை நெறிப்படுத்த உதவும்

வேகராசா எழுதிய ''அறியப்படாதவர்கள் நினைவாக'' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவில் திருமதி. சித்திரலேகா மௌனகுரு வழங்கிய கருத்துக்கள் இவை.

கவிதை என்பது கருத்துக்களின் வெறும் மொழியுருவமாக இருக்கக்கூடாது. அதேசமயம் கவிஞரது அனுபவம் அல்லது உணர்ச்சியின் மொழியுருவமாகவும் இருக்கக்கூடாது. அதாவது கருத்துக்கள், அனுபவம், உணர்ச்சி ஆகியவற்றின் வெறும் விவரணமாக இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பவை கவிதை அல்ல.

ஆம் உணர்ச்சிகளை ஜீரணித்துத் தன்வயப்படுத்திப் பதப்படுத்தும் போது மொழி ஊடகத்தின் பயன்பாட்டு முறையால் அவை கவிதை வடிவம் பெறுகின்றன. கருத்துக்களும், நிகழ்ச்சிகளின் ஊடாக மனித நிலைப்படுத்தப்படும் போதுதான் இலக்கியம் என்ற வடிவம் பெறுகின்றன. இவை குறிப்பிட்ட வகையான மொழிக் கையாளுகையால் கவிதைகளாகின்றன.

கவிதையின் மொழி

கவிதையின் மொழி பற்றிக் கூறவந்த பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சன் பேச்சு மொழியின் அம்சங்களை அறிவு, உணர்ச்சி என்று இரு கூறுகளாகப் பிரிக்கிறார். பேச்சின் உணர்ச்சி அம்சத்தில் இசை ஒழுங்கு, ஒலிநய ஒழுங்கு, உவமை, படிமச் செறிப்பு ஆகிய மூன்று அம்சங்களைக் குறிப்பிடுகிறார். பேச்சு மொழியின் உணர்ச்சி அம்சத்தின் இத்தகைய கூறுகள் அதிகமாகச் செழுமை அடைந்தாற் போன்று சாதாரணப் பேச்சு அமைந்துவிட்டால் அது கவிதையாக உருமாறிவிடுகிறது—என்கிறார்.

இன்றைய தமிழ்க் கவிதையின் இசை அல்லது ஒலிநய ஒழுங்கு வெளிப்படையாகத் தெரிவதில்லை ஒருவகையான ஒலி ஒழுங்கு யாப்பில்லாக் கவிதைகளிலும் உள்ளூர அமைந்துவிடுகிறது என்பது வேறுவிடயம். ஆனால் இன்றைய கவிதைகள் வெளிப்படையான இசைப்பாடல்களாய் இல்லை. எனவே இவற்றில் முதலாவதை விடுத்து இன்றைய தமிழ்க் கவிதையில் படிம, உவமை அம்சங்களை முக்கியமானவையாகச் சொல்லலாம்.

''கவிஞன் படிமங்களாகவே சிந்திக்கிறான். வெளிப் பார்வைக்குத் தொடர்பில்லாதது போன்றுள்ள படிமங்களின் மூலமாகத் தன் கருத்துக்களை ஒன்றன் பின் ஒன்றாக அறிவார்ந்த முறையில் முன்வைக்கிறான். இந்தப் படிமங்களை இணைக்கும் தொடர்பு வாசகர்களால் அறியப்படுவதிலும் பார்க்கப் பெரிதும் உணர்ந்து கொள்ளப்படும் அப்போதுதான் கவிதையின் உணர்ச்சி பெரிதும் பீறிட்டு எழும்'' —இது ஜோர்ஜ் தொம்சனின் கருத்து.

இந்தப் படிமங்கள் விபரிப்புக்கும் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கும் பயன்படுவது மாத்திரமின்றி குறியீடுகளாகவும் பயன்படும் தன்மை கொண்டவை. கவிதையின் நேரடி அர்த்தத்துக்கு அப்பால் இரண்டாம் மூன்றும் அர்த்தப் பரிமாணங்களை ஊட்டுவதற்கும் இவை பெரிதும் உதவும்.

ஈழத்து வெளியீடுகள்

கடந்த வருடங்களில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளரின் பல படைப்புக்கள் வெளிவந்துள்ளன. கவிதைத் தொகுதிகளும், சிறுகதைத் தொகுதிகளுமே இவற்றில் அதிகம். ஒரிரு நாவல்களைத்தவிர வேறு இல்லை இவற்றுள் யாழ்ப்பாணத்தில் வெளிவந்தவை, தமிழ்நாட்டில் வெளிவந்தவை, யாழ்ப்பாணம் தவிர்ந்த இந்நாட்டின் ஏனைய பகுதிகளில் வெளிவந்தவையாக எல்லாம் சேர்த்துக் கணிசமான தொகையின.

எனினும் இவற்றில் போதுமான அளவு நூல்கள் பரவலாக அறியப்படவில்லை

இலக்கியத்தில் தன்னியல்பான ஆர்வத்தை வளர்த்துக்கொண்டோர் வேறு குறிப்பான சில காரணங்களால் புதிய புத்தகங்களுடன் பரிச்சயமானோரைத் தவிர பரவலான அறிமுகத்தைப் பெரும்பாலான நூல்கள் — குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு வெளியே பிரசுரமாகும் நூல்கள் பெறுவதில்லை. வெளியீட்டளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் நூல்கள் அதிகம் பிரபல்யம் பெறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் நூல்களுக்குச் சுடச்சுட வெளியீட்டு விழாக்களும், அறிமுக அரங்குகளும் சில சமயம் ஊர் ஊராகவும் நடத்தப்படுகின்றன ''சமகாலப் பிரச்சினைகளைத் துணிவாக எடுத்துக் கூறுவது'' எனவும், தமிழ் இலக்கிய உலகுக்கு கிடைத்த அரும்பெரும் சொத்து'' எனவும் இன்னோரன்ன ரீதியில் இக்கூட்டங்களில் ஆற்றப்படும் சிறப்புரைகள் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. இவையே இந்த நூல்களின் பரந்த அறிமுகமாகின்றன. புதிதாக வாசிக்கத் தொடங்குவார்கள், இளைய மாணவர்கள் மத்தியில் இவையே பிரபலமாகின்றன.

இத்தகைய நிலையில் எம்மத்தியில் வெளியாகும் நூல்களுக்குச் சீரான, நேர்மையான அறிமுகங்கள் தேவை. வாசகரை ஓரளவு நெறிப்படுத்தவும், நூலைப் பரவலாக்கவும் இவை அவசியமாகும். ✤

- கருத்தரங்கில் சித்திரலேகா -

தொகுப்பு: ரட்ணா

யமதர்ம ராஜனுக்கு

வந்ததே கோபம்!

'அங்கம் 3'

கிங்கர:- ஒரு வீட்டில் ஒருவருக்குத் தான் மரணதண்டனை வழங்குவது வழக்கம் ஆனால் இவர்கள் ஒரே வீட்டிலேயே சகோதரர்கள், மாமா மருமகன் உற்றார் உறவினர் எனப் பலர் உயிர் குடிப்பது பொழுதுபோக்கு விளையாட்டு.

யமன்:- சோகமே உருவாக ஒரு வீடே அழுமே.

சித்திர:- ஒரே ஊரில் பலருக்கு ஒரே சமயத்தில் மரணதண்டனை வழங்கும் முறையும் இவர்களால் பேணப்படுகின்றது.

யமன்:- கணவனைப் பறிகொடுத்த கைம்பெண், பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர், உறவினரை இழந்த உற்றோர் இழப்பில்லாத குடும்பமே இருக்கமாட்டாதுபோல் தெரிகிறது.

சித்திர:- குமுதினிப் படகில் சென்றவர்கள் வாளால் வெட்டப்பெற்று ஒவ்வொருவராகக் கொலை செய்யப்பட்டு இங்கு வந்தனர். ஒருவர் மரணதண்டனை பெறுவது மற்றவருக்குத் தெரியவில்லை. பெரிய கியூவில் மானிட உயிர்கள் எம்மை வந்தடைந்தன.

யமன்:- மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே

கிங்கர:- எம்மிடம் இருப்பதோ எருமை வாகனம் மட்டுமே. அதுவும் மிகவும் மந்த கதியில் சென்றடையும்.

யமன்:- அவர்களிடம் எங்கள் தெய்வசக்தியை மிஞ்சும் வாகனங்கள் உண்டா?

நகைச்சுவை

- லோகன் -

சித்திர:- உண்டா என்று கேட்கிறீர்கள்! ஆகாய மார்க்கமாக ஹெலிகள், பொம்மர்கள் பறந்து குண்டு வீசுகின்றன, சுட்டுத்தள்ளுகின்றன

யமன்:- குண்டுவீசினால் என்ன! சுட்டால்தான் என்ன?

சித்திர:- தவறு தலைவரே. தாழப்பறந்து ஹெலி புத்தூரில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களுக்கு மரணதண்டனை வழங்கவில்லையா! தாழப்பறக்கும் ஹெலி தான்தோன்றித்தனமாகச் சுட்டு பலர் உயிரைக் குடிக்கின்றது.

யமன் - விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

கிங்கர:- தரைமார்க்கமாகக் கவச வண்டிகள் சகிதம் பவனிவருவர். நினைத்த மாத்திரத்தில் கவசவாகனம் தீயைப்போல் சுட்டுப்பொசுக்கும். பல உயிர்கள் எம் கையில் சிக்கும். தப்பியவை அரைகுறையாக ஆஸ்பத்திரியை நாடும். நாங்கள் தேடிப்போய் பாசக்கயிறு எறிந்து சிரமப்படவேண்டிய அவசியமிருக்காது.

சித்திர:- துயில் எழும் முன்னே பொம்மர் தாக்குதல். மின்னொளியில் ஹெலியின் இரவுத்தாக்குதல். முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல் என்று பலவகையான மரணப் பொறிகள்.

யமன்:- மக்கள் நிம்மதியாக நித்திரை கொள்ளவேமுடியாதுபோல் தெரிகிறது மரணம் எப்போது என்ற நினைப்பிலேயே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் நிம்மதியற்ற வாழ்வுதான்

சித்திர:- விதியை எப்படி எழுதுவது என்று தெரியவில்லை. திடீரென மாற்றங்கள் தானாகவே நிகழ்ந்துவிடுகின்றன. எவ்வாறு மரணம் நேரவேண்டும் என்று நாம் எழுதிய முடிபே மாறிவிடுகிறது.

சித்திர:- வீட்டைவிட்டு வேலைக்குச் சென்றவர்கள் வீடு வந்துசேரும்வரை அவரது விதியை நிச்சயிக்கமுடியாதுள்ளது.

கிங்கர:- எங்கள் திணைக்களத்தைச் சார்ந்தவர்கள் உயிரை எடுத்தாலே ஒழிய உடைமைகளை அழிக்கச் சட்டமில்லை.

யமன்: உடைமைக்கு என்ன செய்கிறார்கள்

சித்திர:- வீடுகள், கட்டடங்கள் தரைமட்டமாகின்றன. தோட்டங்கள் தரவைகளாகின்றன. புல்டோசர்மூலம் புதுப்பாதைகளை அமைத்து விரைவாக வருகிறார்கள்.

யமன்:- அட்டூழியங்கள் யாவும் அடக்கமுடியாதவையா. எதிர்ப்பார் யாரும் இல்லையா?

கிங்கர:- நாமே பின்வாங்கும்போது மானிடர் எம்மாத்திரம்.

யமன்:- அப்படியா! இவ்வாறு தமிழர் கஷ்டப்பட காரணம் என்ன சித்திரகுப்தரே.

சித்திர:- தமிழ் தலைவர்கள், அவர்களது மூதாதையர் செய்த வஞ்சனைதான் காரணம்.

யமன்:- புரியும்படி சொல்லும் விளங்கவில்லையே?

சித்திர:- ஆங்கிலேயர்களை அடிவருடி பதவிகள் பெற்றது, பெற்ற பதவிகளைக்கொண்டு அடக்கியாண்டது. சுதந்திரம்பெற்றபோது அரசியல் தீர்க்கதரிசனம் இன்றி முடிவுகள் எடுத்தது. அண்டை நாடான இந்தியா சமஷ்டி அரசியல் முறை வழங்கியதிலிருந்தாவது இலங்கைக்கு அத்தகைய அரசியல் தேவை என்று கருதிற்கொள்ளாமை நாடாளுமன்றம் செல்வதையும் தமது பதவிகளைக் காப்பாற்றவே அரசியல் நடத்தியமை. சிங்கள மக்களின் வகுப்புவாத அரசியல், கல்வியில் தரப்படுத்தல்முறை புகுத்தப்பட்டமை போன்ற பல்வேறு காரணங்கள்.

யமன்:- முன்யோசனையின்றி தீர்க்கதரிசனம் இன்றி செயற்பட்டதால் வந்தவினை.

சித்திர:- ஆம் பிரபு.

யமன்:- எமது திணைக்களத் தொழிற்பாட்டுக்குப் போட்டிவந்த பிறகு எமக்கு இனியென்ன வேலை. நமக்கு ஏது பெருமை. ஆகவே இம்மரணத் திணைக்களம் இருந்தென்ன இல்லாவிட்டால் என்ன. ஆகவே இத்திணைக்கள ஊழியர் யாவரையும் கட்டாய லீவில் செல்லுமாறு கட்டளை இடுகிறேன்.

(முற்றும்)

கால இடைவெளியின்றி

நாவல் படைக்கும் ஆதர் ஹெய்லி

பிரித்தானியர் பேசும் மொழியாய் இருப்பதால் ஆங்கிலம் சிறப்புற்றதா அல்லது ஆங்கிலத்தைத் தாய்மொழியாய் கொண்டதால் பிரித்தானியர் மேம்பாடடைந்தனரா என்று கூறுவது கடினம்.

ஆனால் இன்று ஆங்கிலம் பிரித்தானியாவில் வாழும் ஆங்கிலேயருக்கு மாத்திரம் சொந்தமான பாஷையல்ல. ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்ரேலியா ஆகிய இரு நாடுகளிலும் ஆங்கிலமே தாய்மொழி. மற்றும் பல ஆபிரிக்க நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும் கற்றவர் என்பதும் நாகரிகம் படைத்தவர் என்பதும் ஆங்கிலம் கற்றோரே என்று கூறும் அளவிற்கு அது வியாபித்து நிலைத்து நிற்கின்றது. ஆகவே இவ்வித பெருமை வாய்ந்த ஆங்கிலத்தில் வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவு நூல்கள் மலிந்திருப்பது ஒன்றும் வியப்பான விஷயமல்ல.

நாள்தோறும் புதுப் புது நூல்கள் வெளிவந்து கொண்டிருப்பது மட்டுமல்லாது ஒவ்வொரு நூலும் மில்லியன் கணக்கில் விற்றுக் கொண்டிருப்பதும் இந்த நூல்களில் வருடந்தோறும் மீண்டும் பல பதிப்புகள் வெளி வருவதும் சர்வ சாதாரணம்.

எண்ணில் அடங்காது பெருகிக் கொண்டுவரும் இத்தகைய நூல்களில் இந்த நூல்தான் மிகச் சிறந்தது என்று யாரும் அறுதியிட்டுக் கூற முடியாது. என்றாலும் சிலரது எழுத்துக்கள் ஒரேமாதிரியாக எல்லா நாட்டினராலும் பாராட்டப்பட்டு வாசிக்கப்படுகின்றன. ஜேம்ஸ் பாண்ட், பெரிமேசன் கதைகள் எட்கார் வலஸ், அகதா கிறிஸ்டி கதைகள் போன்றவர்களது எழுத்துக்கள் இலக்கிய அந்தஸ்துப் பெறாதவையாகிலும் உலகெங்கிலும் சாதாரண மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

இந்த வரிசையில் பிரபலமானவருள் ஆர்தர் ஹெய்லி என்பவர் கடந்த கால் நூற்றாண்டாக எழுதிவரும் கதைகள் நாவல்கள் பிரபல்யமடைந்துள்ளன;

ஒரு வகையில் ஆர்தர் ஹெய்லியின் நாவல்கள் தனித்துவம்பெற்று மற்றவைகளில் இருந்து வேறுபடுகின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கும் எத்தனையோ விஷயங்களின் நடைமுறைகள் பின்னணிகள் பற்றிப் பொதுவான தகவல்கள் பொதுமக்களுக்குக் கிடைப்பது சுலபமில்லை.

உதாரணமாக மோட்டார் வாகனங்களை எடுத்துக் கொள்வோம். இவை எப்படி உற்பத்தியாகின்றன, எப்படித் திட்டமிடப்படுகின்றன, இவற்றை உற்பத்தி செய்வதில் உள்ள பிரச்சினைகள் பின்னணிகள் என்பவற்றை ஒரு தொழிற்சாலையைப் பின்னணியாகக் கொண்டு, அதில் வேலை செய்பவர்களுடைய உறவுகள் - பேதங்கள் - இவைகளிடையே ஏற்படும் காதல்கள், மோதல்கள், போட்டிகள் பொறாமைகள் போன்ற பல சம்பவங்களைக் கற்பனையில் ஆக்கிக் கோர்த்து ஒரு சுவையான நாவலாக ஆக்கித் தந்துள்ளார் ஹெய்லி.

இந்த நாவல் உணர்ச்சியும் ஓட்டமும் மெய் மறக்க வைக்கும் கதாவளமும் கொண்டு படிப்பவர்க்கு உவகை ஊட்டுவது மட்டுமல்லாது மோட்டார் தொழில் பற்றிய நெளிவு சுழிவுகளைப் பற்றிய அறிவையும் கொடுக்கின்றது. ''சக்கரங்கள்'' (Wheels) என்ற பெயரில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறே விமான நிலையம், ஹோட்டல், இராஜதந்திரம் மின்சாரம் இவ்வாறு பலவிதமான கருக்களை வைத்து, ''தெரிந்த விஷயம் -தெரியாத தகவல்கள்'' என்ற வரிசையில் அடக்கக் கூடிய பல விஷயங்களை நாவல் உருவில் அமைத்துத் தந்துள்ளார். ஆசிரியர். இந்த நாவல்களில் செக்ஸை நன்றாகவே பயன்படுத்தியுள்ளார். நுணுக்கமான, விஷயங்கள் கூறமுற்படும்போது செக்ஸ் பூச்சுக்களை ஏற்படுத்துவது அவரது இயல்பு.

ஆர்தர் ஹெய்லி என்பவர் 1920 ம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்தவர். ஒரு காரியாலயத்தில் ஆபீஸ் பையனாக வாழ்க்கையை ஆரம்பித்து, பின் லிகிதராக வேலை செய்து கொண்டிருக்கும்போது இவருக்குப் பத்தொன்பது வயது. இரண்டாவது உலகமகா யுத்தம் இவருக்கு நல்ல வாய்ப்பையும் - சிறந்த அனுபவங்களையும் நல்கியது. விமானப்படையில் சாதாரண நிலையில் சேர்ந்து படிப்படியாக ஆபீசர் பதவிக்கு உயர்ந்து நின்றார். யுத்தம் முடிந்ததும் கனடாவில் சென்று குடியேறி வியாபாரம், விளம்பரம், பத்திரிகைத் தொழில் இப்படிப் பல துறைகளில் உழைத்தார். வாழ்க்கையைப் பல கோணங்களில் இருந்து நோக்கிப் பெற்ற அனுபவம் இவருக்கு கதையாசிரியராவதற்கு நல்ல அடித்தளத்தையும் அமைத்துக் கொடுத்தது

இவர் எழுதிய ஒரு டெலி நாடகம் பெரிய வெற்றியை அளித்தது அதை இவர் விரித்து (Flight Into Danger) நாவலாக்கினார். பின்பு இது ஒரு சினிமாப் படமாகவும் எடுக்கப்பட்டது இந்த வெற்றி கொடுத்த உற்சாகம் இவர் முழுநேர எழுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

— டி. என். எஸ். சர்மா —

இந்தியக் கோவிலால்

இலங்கைக்குப் பாதகமா...?

இந்தியாவிலுள்ள விஷ்ணு ஆலயங்களில் மிகப் பெருமை வாய்ந்ததும் சிறப்பு மிக்கதும் ஸ்ரீ ரங்கத்திலுள்ள ரங்கநாத ஆலயம்.

இராமாயணத்துப் போர் முடிந்த ராமன் பட்டாபிஷேகம் முடிந்ததும் விபீஷணனுக்கு ராமன் ரங்கப் பெருமானின் விக்கிரகம் ஒன்றைக் கொடுத்து வழி அனுப்பினார். விபீஷணன் ஸ்ரீரங்கத்துக்கு வரும் போது உச்சி வேளைப் பூஜை நேரம். ஆகவே அந்த இடத்திலே பூஜை செய்யப்பட்டது அதன் பிறகு விக்கிரகத்தை அசைக்கவே முடியவில்லையாம் இது வரலாறு. இப்படி தொடங்கின சிறு ஆலயம், தொடர்ந்து ஆட்சி செலுத்திய சேர. சோழ. பாண்டிய மன்னர்களின் உதவியோடு வேலைகள் தொடர்ந்து நடந்து வந்தும் ஏதோ காரணத்தால் இடையில் நிறுத்தப்பட்டது. பல ஆண்டுகளாக முடிவு பெறாத நிலையில் இருந்த காரணத்தினாலோ என்னவோ இதற்கு மொட்டைக் கோபுரம் என்ற பெயரும் வழங்கப்பட்டு வந்தது.

கோபுரத்தைக் கட்டி எழுப்புவதற்கு இது வரைகாலமும் எவரும் முன்வரவில்லை ஆனால் அஹோபில மடத்தின் 44 வது தலைவர் எடுத்த முயற்சி தகுந்த பலனை அளித்தது. யுனெஸ்கோ முதலிய ஸ்தாபனங்கள் தமிழ், கேரள, கர்நாடக மாநில அரசுகள் இந்திய உப ஜனாதிபதி வெங்கட்ராமன், எம்.எஸ். சுப்புலட்சுமி, இளையராஜா இவர்களின் முயற்சியிலும் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் உதவியுடனும் இராஜகோபுர வேலைகள் தொடக்கப்பட்டன. எட்டு வருடங்களாக நடைபெற்ற வேலைகள் அண்மையில் பூர்த்தியாகி கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது. உப ஜனாதிபதி, தமிழ்நாடு முதலமைச்சர் 10 கோடிக்கும் மேலான அடியார்களும் கலந்து கொண்டார்கள் காவேரி நதிக் கரையில் 155 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த ஆலயம். 50 சிறு ஆலயங்களையும், 21 கோபுரங்களையும் உள்ளடக்கியுள்ளது. ஆசியாவிலே மிக உயர்ந்த கோபுரம் இது.

இதற்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டடப் பொருட்கள் 12.000 மெற்றிக்தொன் சீமெந்து 17. 5 கோடி செங்கல்லு, 130 மெற்றிக் தொன் கம்பி. கோபுரத்தின் உச்சியில் ஒவ்வொன்றும் 186 கிலோ எடையுள்ள 3. 15 மீற்றர் உயரமுள்ள 13 வெள்ளி கலசங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கோபுரவாசல் தெற்கு நோக்கியிருப்பதால் இலங்கைக்குப் பாதகமாக இருக்கும் ஓர் ஐதீகம் நிலவுகிறது. ★

தொகுப்பு: ஷர்மிளா ஈஸ்வரதாஸ்

விவசாயிகளின் நண்பன் செண்பகம்

மண் இயல்பை சமநிலைப்படுத்தும்

யாழ்ப்பாணத்தில் நாங்கள், எப்பகுதியிலும் சர்வ சாதாரணமாகக் காணும் பறவை செண்பகம். பற்றைகளில் மறைந்து, ஒளிந்து, தத்தி, தெத்தித் திரியும் இப் பறவையின் இனம் இப்போது அருகிக்கொண்டு வருவதைக் காண்கிறோம். உருவத்தில் காக்கை போல் இருக்கும் இப்பறவை, காக்கை போல் கரிய நிறமுடையது ஆனால் செம்பழுப்பு நிறக்கண்களையும், இறக்கைகளையும் கொண்டது.

கோழிகள் போல், இறக்கைகளைக் கொண்டிருந்தாலும் இப்பறவையால் அதிக தூரமும் உயரமாகவும் பறக்க முடியாது. பொதுவாக நடப்பதிலும் பார்க்கத் தெத்தித் திரியும் இப்பறவை மிகவும் சாதுவானது, கிட்ட நெருங்கினும் எதிர்க்காமல் தூர விலகி விடும். இதன் சாதுத்தனத்தைக் கருதியோ என்னமோ மனிதரும் இதை அதிகம் சீண்டுவதில்லை.

பொதுவாக இப் பறவை நிழல் சார்ந்த மறைவிடங்களிலும் பற்றைக்காடுகள், வேலிகளின் மறைவிட ஓரங்கள், தோட்டங்கள், குட்டைப் பற்றைகள் முதலிய இடங்களில் காணப்படும். இதன் சத்தத்தைக் கேட்டால் மனதில் ஒருவித பயமுண்டாகும். அவ்வளவு கர்ணகடூரமானது ஒருவர் அடித்தொண்டையால் கூவுவதுபோலிருக்கும்.

அதன் குரல் ஆண் பெண் தேடுதலின்போது ஒரு சத்தமும் (கூவுவது [illegible]), [illegible] சத்தம் (செயற்கை [illegible] - ஆனால் இலேசானவை) இன்னுமொருவித சத்தமும், குஞ்சுகளுக்கு இரை கொடுக்கும்போது இன்னுமொரு சத்தமுமிடும் இப்பறவையின் கூட்டைக் காண்பது மிகமிக அருமை.

பூமியின் சமநிலைப் படுத்தும் தொழிற்பாட்டினைச் செய்யும் மிகவும் முக்கியமான ஜந்துக்களில் செண்பகமும் ஒன்று. இதன் உணவு - பூச்சி புழுக்கள், சிறு பாம்புக்குட்டிகள், மட்டத்தேள் போன்றவை ஆகவே மனிதனுக்கு மிகவும் வேண்டிய, உபயோகமான பறவையாகின்றது. இவை தோட்டப்பயிர்களை [illegible] செய்யும் பூச்சி புழுக்களை உண்பதால் விவசாயிக்கு உதவுவதோடு பூச்சி, புழுக்கள் பெருகிவிடாது சமநிலைப் படுத்தியும் வருகின்றன.

விவசாயிக்கு நண்பனான இப்பறவை விவசாயி, தோட்டத்திற்கு விசிறிய தற்கால நச்சு மருந்துகளை உண்டு இறந்த புழுக்களைத் தெரியாது உண்டு இறந்து விடுகின்றன விவசாயியே தன்னையுமறியாமல் தன் நண்பனின் கொலைக்குக் காரணமாகி விடுகிறான்.

இது மூலிகைகளை அறிந்த பறவை. எனவே வைத்தியர்கள் அபூர்வ மூலிகையொன்றைக் கண்டறிவதற்கு இதைப் பயன்படுத்துவதுண்டு

செண்பகம் தன் குஞ்சில் மிகவும் பற்று உள்ளது என்றும் குஞ்சுக்கு ஏதாவது ஆபத்தென்றால் எப்பாடுபட்டாவது குஞ்சைக் காப்பாற்ற வழி பார்க்குமென்றும் இக் குணத்தைப் பயன்படுத்தச் சிலர் ஓர் அபூர்வ மூலிகையைக் கண்டறிவார்களாம்.

முதலில் செண்பகத்தை இனம் கண்டு கொள்ள வேண்டும். பின் அதை அவதானித்து எப்பாடுபட்டாவது அதன் கூட்டைக் கண்டு பிடித்துவிட வேண்டும். பின் அது கூட்டில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் மட்டும் காத்திருக்க வேண்டும். குஞ்சு சிறிது வளர்ந்த ஆனால் அது பறக்கவோ, ஓடித் தப்பவோ, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவோ முடியாத இரண்டும் கெட்டான் பருவத்தில் தாயில்லாதபோது குஞ்சுகளின் இருகால்களையும் சேர்த்து ஓர் இரும்புக் கம்பியால் பிணைத்துக் கட்டிவிட வேண்டும்

தாய்ப்பறவை வந்தவுடன் குஞ்சு கட்டப்பட்டு அவதிப்படுவதைப் பார்க்கச் சகியாது எப்படியாவது குஞ்சைக் காப்பாற்ற முயலும். முடியாத போது குஞ்சை விடுவிக்கவேண்டி ஒரு குறிப்பிட்ட அபூர்வ மூலிகையைத் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு வரும். அம் மூலிகையை அது தன் குஞ்சின் காலில் வைத்தவுடன் காலில் கட்டியிருக்கும் கம்பி உருகி, இழகிப் பிரிந்து விடுமாம். பின் தன் குஞ்சைக் கூட்டிக் கொண்டு போய்விடு

(6ஆம் பக்கம் பார்க்க)

ஜி. ஏ. ஸ்ரனிஸ்லாஸ்



புரோக்கர்:- தம்பிக்கு எப்பிடியான வீடு தேவை?

மற்றவர்:- பெரிசாய் ஒன்றும் தேவையில்லை நாலு ஐந்து பேர் இருக்கக் கூடியதான ஒரு பதுங்குகுழி உள்ள வீடாய்ப் பாருங்கோ.

- துளசிதரன் -

★ சிறுபோகம் வருகின்றது ★

நல்லின விதை நெல் வகைகளை நீங்களே உற்பத்தி செய்யுங்கள்

தற்காலப் பிரச்சினையினால் விவசாய திணைக்களம் விவசாயிகளுக்கு தேவையான விதை நெல்லை வழங்கமுடியாத நிலையில் உள்ளதினால்

அவற்றைப் பேணிக்காக்க சில சீரான வழிமுறைகள்

விவசாயிகள் தமக்கு வேண்டிய நெல்லையும் மற்றைய உபஉணவுப் பயிர் விதைகளையும் தமது விளைநிலங்களிலிருந்து சேகரித்து வைப்பது இன்றியமையாததாகும்.

இனத் தூய்மை உள்ள ஒரே குடும்ப தாய்க்கலங்களினால் தூய்மையாக உருவாக்கப்பட்டவை, முளைச் சக்தி அதிகமாகவும், முளைத்திறன் கூடியதாகவும் உள்ளவை, களை விதைகள், கல விதைகள், பிறபொருள்கள் இன்றி தூய்மையாக காணப்படுபவை,) பருமன், அளவு, நிறம் தோற்றம் முதலியவற்றில் சகலவிதைகளும் ஒன்றாகக் காணப்படுபவை, பூச்சிப்பீடை தாக்கம் அற்றவை, நன்கு முதிர்ந்த உலர்ந்த சரப்பதன் 13 வீதம் குறைவாக உள்ளவை நல்லின விதைநெல்.

> விவசாய திணைக்களத்திடம் இருந்து நல்லின விதைநெல் பெறுவது தமிழ்ப்பிரதேசங்களைப் பொறுத்தளவில் சலபமான காரியமல்ல இந்நிலையில் விவசாயிகள் நல்லின விதைநெல் உற்பத்தியில் தேர்ச்சி பெற இக்கட்டுரை உதவும்.

பயன்கள்

நல்லவிதையால் சிறந்த பயிர் வளர்ந்து அதிக விளைச்சல் பெற்று கூடிய லாபம் ஈட்டமுடியும். புதிய திருந்திய இனங்களினால் அதிக விளைச்சல் கிடைக்கிறது. இனத் தூய்மையினால் விளைவு பெருகுகின்றது.

ஏக்கருக்கு விதைக்கும் விதையின் அளவு குறைகின்றது. மற்றைய உள்ளீடான இரசாயன மருந்து, உரம், நீர்ப்பாசனத்தின் உச்சபயனை அடையக்கூடியதாக உள்ளது.

உற்பத்தியாகும் விளைவு சிறந்ததர நிர்ணயம் பெறுகின்றது. சந்தையில் உச்சவிலைக்கு விற்கமுடிகின்றது.

இதனால் சிறந்த விலையிலிருந்து உச்சவிலை கிடைக்கின்றது.

உங்கள் பகுதியில் சிறந்த கடின உழைப்புள்ள புதியமுறைகளைக் கையாளக்கூடிய ஓரளவு பணவசதியுள்ள கமக்காரர்களை இனம்காணுங்கள். அவர்களின் பெயர், விலாசம்; பயிரிடும் பயிர் கட்டுத்தகாவ விளைவுகளைக் குறிப்பு எடுங்கள்.

பயிரின் இனத்தின் குணஇயல்புகளை முதலில் நீங்கள் நன்கு அறிந்திருத்தல் அவசியம். இதை அடிக்கடி வயலைப் பரிசோதிப்பதாலும்; குறிப்புகள் எடுப்பதாலும் நீங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். பயிரின் குணஇயல்பு வேறுபாடுகளை உங்களின் பார்வை அவதானத்திற்கு பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். இனங்களின் வேறுபாடுகள், வளர்ச்சிக் கட்டங்கள், நிறம், தோற்றம், பூக்கும்தன்மை, வயது போன்றவற்றைக் கவனமாக அவதானியுங்கள். ஓர் இனத்தின் அதி சிறந்த குணஇயல்புகளை மற்றைய இனங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். வயலில் பயிர் பூக்கும்பொழுதும், அறுவடைக்கு முன்பும் விஜயம் செய்து பூ கதிரும் காலம், மாறுபட்ட பூக்கும்கால இடைவெளி, பயிரின் உயரம், செடிநிலையின் தன்மை, பூச்சி பீடைத் தாக்கம் போன்றவை இருப்பின் அவற்றை உடனடியாக அகற்றுங்கள். ஏனெனில் இவை கலப்பின விதைகளைத் தோற்றுவிக்கும்.

வயலில் தூய்மையைப் பேண களையகற்றல் இருமுறை செய்வது அவசியமாகின்றது.

ஆராய்ச்சி நிலையங்களில் 2% பிஜி 34-6 இல் குலம் பெயர்ந்த விதையில் கலப்பு ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. திடகாத்திரமான பயிர்கள் வயலின் ஒரு பகுதியில் காணப்படின் அவற்றிற்கு குறியீடுகளை இடவும். நெற்பயிர் தன்வின மகரந்தச் சேர்க்கை உடையதினால் வரம்பிலிருந்து 10 அடி நடுவே அறுவடை செய்யவும். அயன் மகரந்தச் சேர்க்கையுடைய மற்றைய பயிர்களுக்கு 600 அடி எல்லையிட்டு அறுவடை செய்யவும். முடிந்தளவு கையால் சூடடித்து தூற்றுதல் நன்மை பயக்கும் பிற உபகரணங்கள், மிருகங்கள், வாகனங்கள், களஞ்சியசாலை சுற்றுச் விதைகளில் கலப்பு ஏற்பட ஏதுக்கள் உண்டு;

ஒரே அளவு வளர்ச்சியுடைய பயிர்களையும், ஒரே காலத்தில் பூத்து முதிர்ச்சியடையும் பயிர்களையும் விதைக்காக தெரிந்து எடுங்கள். ஒவ்வொரு இனத்தின் குணஇயல்புகள் கொண்ட கையேடுகளைப் பெற்று உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒரே இனம் ஒரே நிலத்தில் செய்யப்படுமாயின் கலப்பினமற்ற விதைகளைப் பெறமுடியும்.

களஞ்சியப்படுத்தல்

போதிய காற்றோட்டமுள்ள உலர்ந்த களஞ்சிய சாலைகளில் விதைகளைக் களஞ்சியப் படுத்துங்கள். களஞ்சியப் படுத்தப்படும் விதைகளுக்கு 2% அடவின் தூசி விதைகளுக்குத் தூவி விதைப்பகரணம் செய்யவும் கொள்கலன், களஞ்சிய அறைகளைத் தொற்று நீக்கவும். நீண்டகாலத்துக்கு விதைநெல்லை சேகரிப்பதாயின் (ஒரு போகத்திலிருந்து மற்றைய காலபோகம்வரை) வெக்கை இன அரிசியை சூட்டில் வைப்பதினால் முளைத்திறன் கெடாமல் இருக்கும். செடியில் முற்றிக் காய்ந்த நெல் விதைகளுக்கு உறங்கு காலம் உண்டு, அதிகமாக நீர்த்தன்மையுள்ள சதைகளையுடைய கனிகளிலிருந்து பெறப்படும் விதைகளுக்கு உறங்கு காலம் இல்லாமலோ, அல்லது குறைந்தோ இருக்கும். விதையின் உறங்கு காலமானது பயிர் முற்றிய நாளிலிருந்து கணக்கிடப்படுவதாகும்.

★

- சிக்கிலேயர் பீற்றர் -

ஈழ மண்ணில் சிற்பக்கலை அருகி வரும் அவல நிலை

சிற்ப வேலைகளில் இன்றைய இளைஞர்களுக்கு ஈடுபாடு இல்லையே சிற்பக்கலை நமது மண்ணில் அருகிவிடப் போகிறதே

—இப்படிக் கவலை தெரிவிக்கிறார் தெற்கு அராலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிற்பி விசுவநாதர் தம்பிராசா.

இருபத்தைந்து கோவில்களுக்கு மேல் தூபி, கோபுரம், மணிமண்டபம், வாகனம், தூண், இரதம், கர்ப்பக்கிரகம் போன்ற ருத்திர மட்ட, இரட்டப் பஞ்சாங்க, முகபத்திரம் போன்ற வேலைகளைச் செய்தும்; 'சிற்பசாஸ்திர சரபம்', 'சிற்பகலா பூஷணம்', 'சிற்பகலா சிரோன்மணி' போன்ற பல பட்டங்களைப் பெற்றும், பொன்னாடைகள் பல போர்க்கப்பட்டும், எந்தவித பெருமையும் கர்வமுமில்லாது சாதாரண மனிதராய், ஏதும் அறியாதவர்போல 'ஒரு தொண்டன்' இறைவன் பணி செய்வதற்கு இது வரும் கிடைத்தது என்ற அடக்கத்துடன் கூறுபவர்தான் சிற்பி விஸ்வநாதர் தம்பிராசா. இவர் நேர்முகம் உங்களுக்கோர் அறிமுகம்.

கேள்வி: எத்தனையாம் ஆண்டிலிருந்து இந்தச் சிற்பத் தொழிலில் ஈடுபட்டீர்கள்?

பதில்: 1950 இலிருந்து எனக்கு ஈடுபாடு. அப்போது எனக்கு வயது இருபது.

கேள்வி: உங்களுக்கு குருவாக இருந்தவர்?

பதில்: எனது தந்தையாரே எனது குரு.

கேள்வி: அப்போ பரம்பரை பரம்பரையாக விஸ்வகுலகோத்திர சிற்பிகளா நீங்கள்?

பதில்: இல்லை. நாங்கள் வேளாளர்கள். கமம் தான் எங்கள் தொழில். சிற்பத்தொழிலில் அதில் ஏற்பட்ட ஆர்வத்தால் கற்றுக் கொண்டோம்.

கேள்வி: உங்களுக்கு இத்தொழிலில் ஈடுபாடு ஏற்படக் காரணம், உங்கள் தந்தையார், பாட்டனார் இதில் பங்கு கொண்ட நோக்கம்?

பதில்: அராலி சிவன் கோயில் கட்டுவதற்குப் பல வருஷங்களுக்கு முன் இந்தியாவிலிருந்து சிற்பிகள் ஸ்தபதிகள் வந்திருந்தார்கள். எனது பாட்டனார் அவர்களுக்குத் தொண்டு செய்து உதவிக்காகக் கூட இருந்தார். எனது பாட்டனாரிடம் அவர்கள் கொண்டிருந்த அன்பால் சிற்ப வேலைகளை அவருக்குக் காட்டிக் கொடுத்தார்கள். அவர்களும் கற்றுக் கொண்டார்கள். எனக்குச் சிறுவயது முதலே படங்கள் வரையும் ஆர்வம் இருந்தது. இதைப் பார்த்த என் தந்தை இதில் என்னை ஈடுபடுத்தி

இளைஞர்கள் நாட்டம் காட்டவில்லையே என்று

கவல்கின்றார் சிற்பி தம்பிராசா

னர். நானும் ஆர்வத்தோடு கற்றுக் கொண்டேன்.

கேள்வி: உங்களுக்கு இவ்வேலையில் விசேஷமான ஈடுபாடு வரக் காரணம்?

பதில்: ஒருமுறை நான் மாவிட்டபுரம் தெற்கு வாசல் சந்நிதியில் படுத்துக்கொண்டு யோசிக்கலானேன். இந்தியாவிலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டு ஆலய நிர்மாண வேலைகள் நடக்கின்றனவே. அதை ஏன் நாங்களே செய்யக்கூடாது. இக் கோவில் ராஜகோபுரம் போன்ற அமைப்புக்களை நாம் ஏன் கட்டக்கூடாது — இந்தச் சிந்தனை 'கல்வேலை' செய்த என்னை கருங்கற்களைப் பொழிந்த [illegible] வரும் வேலைகளைச் செய்து வந்த என்னைக் கோபுரம், தூபி, கோவில் நிர்மாணம் போன்ற ஆலய சம்பந்தமான அனைத்து வேலைகளிலும் ஈடுபட வைத்தது.

கேள்வி: இந்த காலமாக இந்த ஆலய நிர்மாண வேலைகளில் ஈடுபடும் நீங்கள் இன்றைய மக்களின் பக்தி, விசுவாசம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

பதில்: பக்தி இல்லாமல் இல்லை. ஆனால் போட்டி, பொறாமை காரணமாகப் பக்தி குறைகின்றது என்றுதான் சொல்ல வேண்டும். இதோ பாருங்கள் புதிய புதிய ஆலயங்களைக் கட்டுவதில் பயனில்லை. இருக்கும் பழைய ஆலயங்களைத் திருத்தி அமைப்பதே சிறந்தது. போட்டி காரணமாகப் புதிய புதிய கோவில்களைக் கட்டினால் பின் அதனை பராமரிப்பது பற்றி அவர்கள் சிந்திப்பதாக இல்லை.

கேள்வி:- இருக்கும் ஆலயங்களைத் திருத்திப் புனருத்தாரணம் செய்வது சிறந்தது. புதிய அமைப்புக்களை நிர்மாணிப்பதைவிட பழையனவற்றைப் புதுப்பிக்க வேண்டுமென்ற உங்கள் கருத்து வரவேற்கத்தக்கது....?

பதில்: இதோ என்னைப் பொறுத்தமட்டில் தனி ஒருவரது பணத்தில் கோவில் நிர்மாணவேலை செய்யாது பலரும் பங்கு கொள்ள வேண்டும் என்பதுதான் எனது ஆசை. தனியார் நல்ல நோக்கத்தில் செய்தாலும் அவர் பிள்ளைகள் தங்கள் தந்தையார் செய்தது தானே என்று சர்வம் கொள்ளலாம். எனது என்ற 'மமதை' இல்லாமல் பொதுமக்களின் பொதுச் சொத்தாகவே ஆலயங்கள் அமைவது நல்லது.

கேள்வி: உங்களது வாழ்க்கையில் உங்களுக்கு மிகவும் பிடித்தமான மனதை விட்டு அகலமுடியாத சந்தோஷமான சம்பவம்...?

பதில்: சொல்கிறேன். அடைக்கலத் தோட்டக் கந்தசாமி கோவிலே முதல் முதல் எனக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். ஆறு ஏழு வருஷங்களுக்கு முன்பு என்று நினைக்கிறேன். அந்த வைபவம் என்மனதை விட்டு அகலாத ஒரு நிகழ்ச்சி. ஆனால் இந்த சம்பவத்தால் எனக்கு மிகவும் சந்தோஷமேற்பட்டாலும் இச்சந்தர்ப்பத்தை நான் எனது வாழ்க்கையின் திருப்புமுனையாகக் கருதுகிறேன். பொதுமக்கள் மத்தியிலே இறைவன் பணியால் கிடைத்த கௌரவத்தை நான் பேணிக் காப்பாற்ற வேண்டுமே மற்றவர்களிலும் பார்க்க வேறு விதமான வாழ்க்கை, ஒரு தூய வாழ்க்கை வாழவேண்டும் என்ற ஒரு எண்ணத்தையே இது எனது உள்ளத்தில் வேரூன்றச் செய்து விட்டது.

அடுத்து பூவரசங்குளத்தில் இந்தப் போர்க் காலத்தில் படையின் தொந்தரவுக்கு இடையில் சென்று ஒரு கோவில் வேலை செய்து விட்டு இரண்டு வருடங்களுக்கு முன் திரும்பினேன். அங்குள்ள மக்களின் அன்பும் ஆதரவும் என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டது.

கேள்வி: இக்கலையை உங்களுக்குப் பின்...?

பதில்; ஆம் ஆம் இதுவரையும் இக்கலையில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவரும் இளைஞர்களைக் காணமுடியாமல் இருக்கிறேன்.

★

செவ்வி - ச. ஜெயச்சந்திரன்

அம்பு வம்பு

எதுவும் செய்யாது அம்போவென்று அலைவரை பார்த்திருப்பீர்கள். அம்போடு அலைந்தவரை?......

பொலிகண்டியைச் சேர்ந்தவர் ஜோண் சில்வா. ஒரு தகராறின் போது கோபமடைந்த அவரது எதிரி 4 அடிநீளமுள்ள அம்பு ஒன்றை அவர்மீது எறிந்தார்.

அது அவரது காதுக்கருகில் நுழைந்து மூக்குக்கு அருகில் வந்து நீட்டிக்கொண்டு நின்றது.

அம்பை உருவினால் வலிக்குமோ என்று சில்வாவிற்கு பயம்.

ஏதடா வம்பென்று பேசாமல் அம்போடேயே. அலைந்தார் சுமார் பத்து ஆண்டுகளாக.

★

கால இடைவெளி...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தாளராளர். இவரது எழுத்துக்கள் இருபத்தேழு மொழிகளில் வந்துள்ளதென்றால் ஆசிரியரது எழுத்துக்களுக்கு உலகம் முழுதும் கிடைத்திருக்கும் நன்மதிப்பு நன்றாகப் புலப்படும். தென்னிந்திய சஞ்சிகை ஒன்று ஒழுங்கு செய்த இலக்கிய கருத்தரங்கொன்றில் இவர் எழுதிய விமானநிலையம் என்ற நாவலைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப் பெற்றது.

1969ன் பின்னர் பஹாமாஸில் குடியேறியுள்ள இவர் மணமானவர் இவருக்கு மூன்று குழந்தைகளும் உள்ளனர்.

ஆதர் ஹெய்லியால் எழுதப்பட்ட நவீனங்களில் The Final Diagnosis என்ற கதை ஒரு வைத்தியசாலையைப் பற்றியது அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் பேர்லிங்டன் பகுதியில் இந்த வைத்தியசாலையின் களமும் பின்னணியும் அமைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் திருவாகம் - நடவடிக்கைகள் - பழக்கவழக்கங்கள் - பாரம்பரியங்கள் - ஒழுக்க விதிகள் - விசேஷ நிகழ்ச்சிகள் பரப்புகள் - இவைகளை அடித்தளமாகக் கொண்டு வைத்தியசாலை ஒன்றில் கடமை பார்க்கக் கூடிய டாக்டர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்கள் - தாதிகள் இலிகிதர்கள், மாணவதாதிகள் மற்றும் சிப்பந்திகள் போன்ற மாந்தரைக் கதாபாத்திரங்களாகக் கொண்டு - அவர்களுக்குள் ஏற்படும் தொடர்பு உறவு, முறிவு, காதல், போட்டி, பொறாமை, கோபம், சண்டை சச்சரவு இவைகளை வைத்துக் கதை எழுதப்பட்டுள்ளது.

முக்கியத்துவம் பெறாத சிறுபாத்திரம் கூட நுணுக்கமாக எடுத்துக் காட்டப்படும் சிறப்பு அம்சத்தாலும், திறமையான சம்பாஷணைகளாலும் சித்திரிக்கப்பட்டு தெளிவான உருவம் பெறுகின்றது.

ஆர்தர் ஹெய்லி இவ்வாறான கதைகளை எழுதுவதன் நோக்கமே பொது மக்களுக்கு அவ்வித துறைபற்றிய சாதாரண அறிவைப் புகட்டுவதற்கேயாம்.

இந்த நாவலைப் படிப்பதன் மூலம் ஒரு வைத்தியசாலை எப்படி இயங்குகிறது. நிதி நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது. ஒரு வைத்தியசாலை நடாத்துவதாலும் என்னென்ன பிரச்சினைகள் தோன்றும், அவை எப்படி யெல்லாம் சமாளிக்கப் படுகின்றன, என்பன போன்ற தகவல்கள் நிறையக் கிடைக்கின்றன.

★

விவசாயிகள்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

மாம். பின்னர் இக்கூட்டில் உள்ள அபூர்வ மூலிகைகளை இவர்கள் தேடி எடுப்பார்கள். இப்படியும் நம்பிக்கை உண்டு.

இது ஆராயப்பட வேண்டியது. இது ரசவாதத்தின் ஒரு பகுதி.

★

இனப்பிரச்சினையில் ஏனிந்த---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

காரம் கொண்ட ஒருவர் புதுடில்லியில் இன்று இல்லை. இலங்கைப் பிரச்சினை பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு பல பேரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் மேலெழுந்தவாரியான அக்கறையையே காட்டுகின்றனர். தீர்மானம் ஒன்றை உருவாக்க வேண்டிய ஒருங்கிணைந்த அமைப்பு ஒன்றும் இல்லை. எப்படி எங்கே சரியான ஆலோசனை கண்டு பிடிப்பது தெரியாது என்று சுற்றிச் சுற்றி வர வேண்டியுள்ளது''—

இந்த மதிப்பீட்டின் படி இனப்பிரச்சினை குறித்து ஒவ்வொரு அமைச்சும் ஒவ்வொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. உதாரணமாக, இப்பிராந்தியத்தில் உள்ள புவியியல் அரசியல் நலன்கள், இலங்கை-இந்திய உறவுகளை வளர்ப்பது ஆகியவற்றில் தான் அக்கறை கொண்டிருப்பதாக வெளியுறவு அமைச்சு கூறுகிறது.

ராஜதந்திர கோணத்தில் அக்கறை கொண்டு இருப்பதாக உள்துறை அமைச்சு கூறுகிறது.

அதிகாரிகளும் முரண்பாடான நிலைப்பாடுகளுக்கு இடமளித்து வருகின்றனர்.

சிலர் தமிழர் விடுதலைக் கூட்டணியை பிரதான தமிழர் அமைப்பாக முன்னுக்கு வைக்க முயற்சிக்கின்றனர்.

வேறு சிலர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

இன்னும் சிலர் விடுதலைப்புலிகள், ஈரோஸ், ஈ. பி. ஆர். எல். எப், டெலோ, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஆறு அமைப்புக்களும் தமிழர்களின் பிரதிநிதிகளாகக் கருதப்படவேண்டும் என்று வாதிக்கின்றனர்.

எல்லாம் சிதறுண்டு கிடக்கின்றன. இலங்கை விவகாரங்களை முழுமையாகக் கவனிக்கக்கூடிய ஒரு தனிநபர் இடையாது.

புதுடில்லியும் எந்த விதமான விதமாக அங்க வாய்ப்புகளுக்கு ஆளாகியுள்ளது

● இந்தியாவுக்கு விரோதமான வெளிநாட்டுச் சக்திகள் இலங்கைக்குள் கால் வைக்கின்றன.

● அரசியல் ரீதியான செல்வாக்கைத் திரு ஜெயவர்த்தனா இழந்து வருகிறார்.

● இராணுவ ரீதியான தீர்வு காணவேண்டும் என்ற சக்திகளின் செல்வாக்கு இலங்கையில் அதிகரித்து வருகின்றது.

'இப்படியான பீதி, அபிப்பிராயப்பு, அச்சம் ஆகிய குழப்பங்களுக்கு மத்தியில் பிரச்சினையை முழுமையாக உணர்ந்த திரு. ஜி. பார்த்தசாரதி போன்ற ஒருவர் இலங்கைக் கொள்கையை வழி நடத்தப் புதுடில்லியில் இல்லையே'— இப்படி இன்னொரு இலங்கைத் தமிழ்த் தலைவர் மதிப்பீடு செய்கிறார்;

இதனிடையில் இந்திய அமைச்சர் பி. சிதம்பரம் தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

'[illegible] இன்னொரு குடியேற்றத்தை மேற்கொள்ள இந்தியா யோசித்து வருகின்றது அதனை நாம் ஆராய்ந்து வருகின்றோம். நாளை நிச்சயமாக அது தெரிய வரும்'—

இப்படி திரு. சிதம்பரம் கடந்த மாதம் 25 ஆம் திகதி சொன்னார்.

இன்றைய குழப்பகரமான நிலைக்கான அவரின் பங்கு இன்று [illegible] பரிசீலனை செய்யப்படும் தருணத்தில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார், (நன்றி: புரொண்ட்லைன்)

சிந்தையை மகிழ்விக்கும்---

(3ஆம் பக்க தொடர்ச்சி)

ளார்.

தியானப் பொருள்

தியானத்திற்கு ஒரு பொருள் அவசியம். சீர்காழிப் பதியினரான திருஞானசம்பந்தர் தியானப் பொருளாக விளங்கினார் எனப்பெரிய புராணம் எடுத்துக் கூறும். மணிவாசகர் தமக்கருளிய குருவடிவத் தியானப்பொருளாகக் கொண்டார் அவ்வடிவையே எல்லா ஆலயங்களிலும் கண்டு தரிசித்தார்.

பூசைக்கும் அருச்சனைக்கும் தியானம் இன்றியமையாதது எனவே தான் பூசைக்கு முன் தியானம் வலியுறுத்தப் படுகிறது. சிற்பத் தியானம் அதிகமாக தியானிக்கப்படும் மூர்த்தியின் உருவ அலங்காரங்களைக் கூறும் இறைவனை ஒளிமயமாக புருவமத்தியில் தியானிக்கும் ஞானிகளுக்கு இவை தேவைப்படாதவை

ஆரம்ப சாதகர்கள்

ஆனால் தியான ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு தியானப் பொருளொன்று கட்டாயத் தேவை. எந்தருபத்தை உள்ளன்புடன் தேசித்தாலும் அது தியானரூபமாகும். இத்தகைமான தியானத்திற்குத் திருமுறைகளும் புராணங்களும் பெரிதும் உதவுவன. அருணகிரிநாதர் முருகப் பெருமானை வழிபடு கடவுளாகக் கொண்டு தியானம் செய்ததற்கு பல பாடல்களைக் கந்தரலங்காரம் கந்தரனுபூதி ஆகிய பிரபந்தங்களில் பாடியுள்ளார். அதுபோலவே கந்தபுராணத்தில் பல தியானத்துக்குரிய பாடல்கள் உண்டு. அவற்றுள் முருகப்பெருமானுக்குரிய ஒரு பாடலைப் பார்ப்போம்.

''முண்டக மலர்ந்த தன்ன முகமும் முகமும் கண்ணும்
குண்டல நிரையும் செம்பொன் மவுலியும் கோல மார்பும்
எண்டரு கரமீராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையும் சிலம்பு மார்க்கும் சரணமும் தெரியக் கண்டான்.

இங்கே முருகப் பெருமானுடைய முகங்களும் கண்களும் குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர்களாக உருவகிக்கப் பட்டுள்ளன. இதனாலே 'கருணைகூர்' முகங்கள் [illegible] காட்டப்பட்டன. அடுத்து குண்டலமணிந்த பன்னிரண்டு காதுகளும், சிரசின்மேலே உள்ள அணிமுடி ஆறும் எடுத்துக் காட்டப்பட்டன. அடுத்ததாக அழகிய மார்பு காட்டப்பட்டது. பிறகு பன்னிரு கைகளும் அக்கைகளில் உள்ள வேல் முதலிய படைகளும் கூறப்பட்டன. இறுதியில் பாதங்கள் கூறப்பட்டன.

பாதங்களே நாமடைய வேண்டிய இடம் நமது அன்பர்களைத் தீர்க்கும் வல்லமையுடையது 'இனித்தமுடைய' பொற்பாதம் தான். அதைப் பாருங்கள் தியானியுங்கள் எனத் 'தண்டையும் சிலம்பும்' ஆரவாரிக்கின்றன. இவ்வாறு ஒரு கடவுளின் சிரசு தொடக்கம் பாதம்வரை வர்ணிப்பதே புலவர் மரபு.

★

இந்திய---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் நட்புறவைச் சுமுகமாகப் பேணும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டது.

1965 - 70 வரையான காலகட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழரசுக் கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கம் அமைத்த காலமிது.

இக்காலத்தில் மேற்குத்தேச சார்புப் பொருளாதாரக் கொள்கையை இலங்கை கடைப்பிடித்த போதிலும் இந்தியாவுக்குக் குறிப்பிடத்தக்க தலையிடியைக் கொடுக்காத காலகட்டமாக இது அமைந்தது.

தமிழரசுக்கட்சி ஆளும் கட்சியுடன் சேர்ந்து இருந்தமையால் இனரீதியான முரண்பாடுகள் பெரிதளவில் தலைதூக்காமையாலும் இலங்கை - இந்திய உறவில் சிக்கல் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் நிலவவில்லை

(நன்றி:- இந்து சமுத்திரப் பிராந்தியமும் இலங்கை இனப்பிரச்சினையும்)

★

தாயகம் ஒன்று இல்லாமல் பூரண சுயாட்சி என்பது ஏது?

நீண்ட காலமாக தமிழர் பிரச்சினையை தட்டிக்கழிக்கும் முறையிலேதான் இலங்கை அரசின் வெளிநாட்டுப் பிரசாரங்கள் அமைந்து வந்துள்ளன. அவைகளுள் முக்கியமானது தமிழ்ப் போராளிகளின் தமிழ் ஈழமே முடிந்தமுடிவாக நிலைகொண்டுள்ளன என்பதுதான். ஆனால் இப்போக்குக்கு தமிழ்ப் போராளிகள் — விசேடமாக தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈழப்புரட்சிகர மாணவர் இயக்கமும்— இன்று ஆப்புவைத்துள்ளனர்.

'தமிழ் மக்களுக்குப் பூரணசுதந்திரம், பாதுகாப்பு ஆகியவற்றை வழங்கக்கூடிய திட்டமொன்றை அரசாங்கம் முன்வைத்தால் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடத்தயார்'' என்று ஐயந்திரிபற புலிகள் இயக்கத்தின் முக்கிய பேச்சாளர்களிலொருவரான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சென்னையில் தெரிவித்துள்ளார். தமிழ் ஈழக் கோரிக்கையே தமிழ்ப் பிரச்சினையை அரசியல் சமதானரீதியில் தீர்த்து வைப்பதற்குத் தடையாக விருக்கிறதென்று இலங்கை அரசு இடைவிடாது கூறிவந்திருக்கிறது.

(அரசியல் நோக்கு)

மேற்காணும் புலிகளின் அறிவித்தலின் பின்பு இந்த அரச கூறிய தடையைக் காரணம் காட்டி தமிழ்ப்பிரச்சினையைத் தட்டிக்கழிக்கமுடியாது. இப்போது பந்து அரச பக்கத்திற்தான் உதைக்கப்பட்டுள்ளது. இப்பந்தை திருப்பி அனுப்பும் விவேகத்தைத்தான் உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது.

பயங்கரவாதம் என்றால் என்ன?

தமிழ்ப் போராளிகள் உண்மையில் விடுதலைப் போராளிகள், பயங்கரவாதிகளல்ல என்பது தெளிவாகிவிட்டது. பயங்கரவாதமென்று சொல்லிச்சொல்லி தமிழர்களுக்குரிய அடிப்படை உரிமைகளை வழங்காதிருப்பது ஜனநாயகத்துக்கு வெகு விரோதமான காரியமாகும்.

பயங்கரவாதம் என்பது என்ன? மக்களுக்குத் தொடர்ச்சியாக பெருமளவில் இம்சை செய்து அதாவது அவர்களுக்குச் சித்திரவதை செய்து, அவர்களைக் கைதுசெய்தும் மறியற்சாலையிற் போட்டும், கொலைசெய்தும் பெரும் பீதியை உண்டுபண்ணுவதே பயங்கரவாதமெனலாம்.

மனித உரிமைகள், கலாசாரம் என்பனவும் பேணப்படவேண்டும்

இன்று தமிழ் மக்களின் பாதுகாப்பு தமிழ்ப் போராளிகளில்தான் தங்கியுள்ளது.

தமிழ் மக்களுக்கு தமிழ்ப் போராளிகள் இரட்சகர்கள் என்று சொல்வது பொருந்தும். இப்போராளிகள் தமிழ் மக்களை யாரிடமிருந்து பாதுகாக்கிறார்கள்? இலங்கை அரசிடமிருந்தும் அதனின் படையினரிடமிருந்தும் என்பது வெளிப்படை! இன்றைய உலகம் இந்த உண்மையை அறியும். இதனாலேதான் தமிழ்மக்கள் அரச பயங்கரவாதிகளிடமிருந்து தம்மைக் காக்குமாறு இந்தியவுக்கும் ஏனைய முற்போக்கு நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எமக்குக் கிடைக்கப்போகும் சுயாட்சி பூரணமானதா, எமது தாயகத்தையும் கலாசாரங்களையும், மனிதஉரிமைகளையும் பேணக்கூடியதாக சிபார்சுகள் அமைந்துள்ளனவா? என்று தமிழ்மக்கள் ஆராய்ந்துதான் ஏற்கவேண்டும்.

பழைய அரசியல் அமைப்பில் 29ம் சரத்திலும் தமிழ் மக்களுக்கும், ஏனைய சிறுபான்மையினருக்கும் வழங்கப்பட்ட பாதுகாப்பு 2/3 பெரும்பான்மை வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்படலாமென்பது தெரிந்திருந்தது. எனவே, எமது பாதுகாப்பு வழங்கும் சட்டம் எக்காலத்திலும் தள்ளுபடி செய்யாதவாறு அமையவேண்டும். சுயாட்சியமைப்பை ஜனாதிபதியோ அல்லது பாராளுமன்றமோ அதை எந்த அதிகாரியோ ரத்துச் செய்யாதவாறு அரசியல் திட்டம் அமையவேண்டுமென்பது எமது கோரிக்கையாக இருத்தல்வேண்டும்.

சுவரிருந்தால்தான் சித்திரமெழுதலாம். சிறுபான்மையினர் தமது தேசிய இனத்தையும் ஒருமைப்பாட்டையும் பேண வேண்டுமாயின் அவர்கள் தமது பாரம்பரியமான தாயகத்தை தமது வாழ்வின் அடித்தளமாகக் கொள்ள வேண்டுவதுமல்லாமல் அதைப் பேணவும்வேண்டும். பெரும்பான்மைச் சிங்களவர்கள் இலங்கையில் எங்கும் கலந்து வாழவேண்டும். என்ற பிரசாரத்தை தமிழர்களாகிய நாம் ஏற்றுக்கொண்டால் எமது இனம் சிதறுண்டு நாளடைவில் அழிந்துவிடும். இதை நாம் மனதிலிருத்திக்கொள்வது மிகமிக முக்கியம். கலந்து வாழ்ந்து வந்ததன் பயங்கரப் பலாபலனே 1956, 58.77,81,82 83,84,85, 87 ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் நன்கு விளக்குகின்றன. நாம் சிங்களவர்களுடன் சேர்ந்துவாழ முடியாது என்பது வெள்ளிடைமலை.

குடியேற்றத் திட்டங்கள்

தாயகத்தைப் பேணுவதென்றால் தமிழர் வாழும் பிரதேசங்களில் தமிழரல்லாதோரை குடியேற்றுவதைத் தடுப்பதுஎன்று பெரும்பாலும் பொருள்படும். அரசு தமது அதிகாரத்தையும், சேனைப்பலத்தையும் பிரயோகித்து தமிழர் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவது மீண்டும் பயங்கர சூழ்நிலையை உண்டுபண்ணுவதாக அமையும். இது இன அமைதிக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் குந்தகம் விளைவிக்கும். நீண்டகால சமாதானத்தையும்! அமைதியையும் முன்விட்டு அரசு மேலும் முயலுமானால் தமிழ் இஸ்லாமிய மக்கள் இதை ஒன்றுமையாக எதிர்க்க வேண்டும். இதுதான் ஒரேயொருவழி. இக்குடியேற்றம் பூரண சுயாட்சிக்கு ஒவ்வாதது

தமிழர் பாதுகாப்பும் தமிழ் மாகாணங்களின் இணைப்பு ஆட்சியும் ஒன்றோடொன்று தழுவிநிற்பன. சிங்கள அரசுகளின் பாதுகாப்பு தமிழ் மக்களுக்கு கிடைக்காத காரணத்தால் தமிழ் மாகாணங்கள் இணைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்கவேண்டும். இதனாற்றான் தமக்கு வேண்டிய பாதுகாப்பை இணைப்பு அரசு ஏற்படுத்தமுடியும்! பலம்வாய்ந்த பொலிஸ் படையை நாம் உண்டு பண்ணலாம். இந்த உரிமை இல்லையானால் சுயாட்சி பூரணமாகாது

தெலுங்கு பேசும் ஆந்திரப் பிரதேசமும் ஹைதராபாத் பிரதேசமும் இன்று இணைக்கப்பட்டு ஒரு மாநில ஆட்சியின் கீழ் அமைதியாக இருந்து வருகின்றன. இலங்கையில் வடகிழ் மாகாணங்கள் இணைப்பதற்கு இது ஒருபெரும் எடுத்துக்காட்டாகவுள்ளது.

தமிழ் மக்கள் பொருளாதார அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டவேண்டும். வரண்ட தமிழ்ப் பிரதேசங்களில் விவசாயம் செழிக்காது தமிழ்மக்கள் படித்தவர்கள் மூளைசாலிகள் என்பது உலகறிந்த உண்மை. இத்தகைய ஒரு இனம் தொழிற்றுறையில் அதிக கவனம் செலுத்தவேண்டும். இற்றைவரை சிங்கள அரசுகள் தமிழர்களையும் பாரிய தொழில்களில் ஈடுபடவில்லை. இதன் காரணமாகவே தமிழ் மக்கள் தொழில் வாய்ப்புகள் இல்லாது அலைபடுகின்றனர். அவர்களது பொருளாதார தளர்ச்சியும் இக்காரணம் கொண்டதே. எனவே சுயாட்சியில் பெருமளவில் பாரிய தொழில்களை ஆரம்பித்து நடத்த நாம் உரிமை பெற்றிருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் வருடம்தோறும் ஏற்படும் பின்தங்கிய பொருளாதார நிலைமையினாலேயே பல்லாயிரந் தமிழ் இளைஞர்கள் வேலைவாய்ப்புத் தேடி வெளிநாடு செல்கின்றனர். இதனால் எமது சமுதாயமும் குன்றிக்கொண்டு போகிறது. இப்போக்கை நிறுத்துவதற்குத் தொழில் துறைகளை நாம் விசாலப்படுத்தவேண்டும்.

நாம் விரும்பிய அளவுக்குப் பொருளாதாரத்தைப் பெருக்க இலங்கை அரசு பொருளுதவி நல்குவதென்பது நினைக்கவும் முடியாத காரியம். தமிழரின் உயிரழிவு பொருளழிவையே இலங்கை அரசும் அதன் ஆதரவாளர்களும் நினைத்துக்கொண்டு செயலாற்றி வருகின்றனர். இவர்களா எமக்கு சுபீட்ச வாழ்வு அளிக்கப் போகிறார்கள்? இவர்களின் இனப்பகையும், பாகுபாடும் எம்மை என்றுமே நிலைகுலையச் செய்யும் எனவே எமது சுபீட்ச வாழ்வுக்கு வெளிநாடுகள் எமக்கு நேரே உதவி நல்குவதற்கான உரிமையை நாம் சட்டரீதியாகப் பெற்றிருத்தல் வேண்டும். இன்றேல் சுயாட்சி பூரணத்துவமானது என்று கருதுவதற்கில்லை. தமிழ் மக்கள் மீது சிங்களவர் போடும் மருத்துவ, உணவு, எரிபொருள் முதலாய தடை [illegible] நாம் மறக்க முடியாது இப்படி மீண்டும் மீண்டும் போட்டு எம்மை வதைப்பார்கள் என்பதையும் நாம் மறக்கலாகாது. மேலும் எத்தனையோ விடயங்களை ஆராய்வது, எமக்கு முன் வைக்கப்படும் சிபார்சுகளை ஆராய்வது எமக்குப் போதிய அதிகாரமளிக்கப்படுகிறதா என்று நாம் திருப்திப் படவேண்டும்.

இலங்கை அரச பயங்கரவாதம் என்று சொல்லிச் சொல்லி எமது விடுதலைப் போராட்டத்தையே நசுக்கப் பார்க்கிறது எமது போராட்டம் விடுதலைப் போராட்டம் என்று அரசு கணித்தால்தான் நல்லதொரு தீர்வுக்கு வழி பிறக்கும். இன்றேல் அரச பயங்கரவாதம் மேன் மேலும் பெருகும், இரத்தாறு ஓடும், நாடு நகரங்கள் அழியும், இந்த நாடு பூராவுமே அழியும். அரச பயங்கரவாதத்திலிருந்து எம்மைப் பாதுகாக்க ஜனநாயக நல்லுலகம் எமக்காக விரைந்து வரவேண்டும். *

எஸ். பொன்னையா
(சட்டத்தரணி)

போலந்தில் பொரியான விமானத்தில் மீட்கப்பட்ட

இரண்டு கடிதத் துண்டுகள்!

வானிலே 183 பேருடன் முப்பது நிமிடங்கள் போராடிய பின்னர், ஒரு விமானம் வெடித்து வீழ்ந்து நொருங்கிக் கிடக்கின்றது.

அந்த இடத்தைச் சூழ்ந்து கொள்கின்றன அம்புலன்ஸ் படைகள், பாதுகாப்புப் படைகள்.

சிதறிக் கிடக்கும் விமானத்தின் உடைந்த பகுதிகளைத் தட்டி, சுற்றி உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தேடிய போது......

ஒரு கடிதம் அகப்படுகின்றது

குழந்தையின் கை யெழுத்தில் அந்தக் கடிதம்......

'அன்புமிக்க அம்மாவுக்கு'...... இப்படி ஆரம்பிக்கிறது அந்தக் கடிதம்.

அந்த விமானத்திற் பயணத்தை மேற்கொண்ட நான்கு குழந்தைகளில் ஒருவருடையதுதான் அந்தக் கடிதம்

மேலும் உடைந்து நொருங்கிய விமானத்தின் பகுதிகள் அப்புறப் படுத்தப்படுகின்றன.

விமானப் பயணத்தின் போது, விமானமோட்டியின் அறையில் நடக்கும் உரையாடல்களைப் பதிவு செய்யும் சாதனம் தேடப்படுகின்றது.

அப்போது இன்னொரு கடிதத்தைத் தேடுதல் நடத்துபவர்கள் கண்டெடுக்கின்றனர்.

'இது தான் முடிவு. விடைபெறுகிறேன்' — இது 59 வயது பைலட் எழுதிய இறுதி வாசகம்.

எப்படியாவது விமானத்தைப் பாதுகாப்பாக இறக்கி விடலாம் என்று முயற்சி செய்து பார்த்தார்.

இனி முடியாது என்ற நிலை வந்தவுடன், எழுதிய இறுதிக் கடிதம் தான் இது

விமானமோட்டியின் பெயர் கப்டன் சிமைன்ட் டவ்சிக். ஒன்பது ஆண்டுகளாக பைலட் ஆக ஆற்றிய அனுபவம் அவருக்கு உண்டு.

வான வெளியில் 20,000 மணித்தியாலங்களுக்கு மேலாகப் பறந்த அனுபவமும் அவருக்கு இருந்தது.

1984 இல் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இலூஷன் ரக விமானம்தான் நொருங்கி வீழ்ந்தது

இன்னும் 28 000 மணித்தியாலங்கள் பறக்க வேண்டிய அந்த விமானம், 7000 மணித்தியாலப் பயணத்தை முடித்துக் கொண்டவுடன், தனது கதையை முடித்துக் கொண்டு விட்டது

கடந்த சனிக்கிழமை காலை போலந்து தலைநகரான வார்ஸோவில் இருந்து 4 மைல் தொலைவில் இப்பயங்கர விபத்து இடம்பெற்றது.

வார்ஸோவில் இருந்து புறப்பட்ட 54 நிமிடங்களின் பின்னர் இரண்டு என்ஜின்களைக் கொண்ட விமானத்தின் ஒரு என்ஜினில் கோளாறு ஏற்பட்டது. பின்னர் தீப் பற்றிக் கொண்டது.

திருப்பி விமானத்தை வார்ஸோ கொண்டு வருவதற்கு கப்டன் முயற்சித்தார். முடியவில்லை

மூவாயிரம் மக்கள் வாழும் கிராமம் ஒன்றின் மீது விமானம் எரிந்து விழும் ஆபத்து உருவானது

கிராம மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தினால் விமானத்தை, அருகில் உள்ள காட்டை நோக்கிச் செலுத்தினார் பைலட்.

நொருங்கி விழுந்த விமானத்தின் இடிபாடுகளுக்கு இடையில் புகை படிந்த நிலையில் ஒரு சமயநூல் காணப்பட்டது.

கிழிந்து கிடந்த அந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

-தீபன் ராஜா-

சொற்சிலம்பம்

போட்டி இல. 67

1		2		3		☒	4
	☒		☒		☒	5	☒
6			7	☒	8		9
	☒	10		11		☒	
12	13		☒	14			
15		☒	16			☒	
	☒	17			☒	18	
☒	19			☒	20		

அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ....

....

வயது: ....

விலாசம் ....

....

ஒப்பம் ....

போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளிவரும்

இடமிருந்து வலம்

1 சீதனம்
4. மன்னன்
6. மாதங்களில் மூன்றாவது
8 வஞ்சகம் மாறிக் கிடக்கிறது
10 சுமைகளுர்
12 நீண்ட காலைக்கு
14. மானுடன்
15 சிரசு
16 மரத்தில் அரிந்து எடுப்பது
17. நல்லதைஇப்படியும் சொல்வர்
18 முத்திரை. இறுதியை இழந்து விட்டது
19. பெண்
20. கை

மேலிருந்து கீழ்

1. இந்திரனின் ஆயுதம்
2 யுக்தி
3. பிழையல்ல
5. மதி
7 வெட்டு. தலை கீழாய்க் கிடக்கிறது.
8. திருமணமாகாத இளம்பெண்
9. ஒருவன்
11. தாமரை
13. இது அறுபதி நான்கு வகையுடையது
16. புள்
17. மூன்று
18. திவ்விய

சொற்சிலம்பம் போட்டி இல. 65 விடைகள்

இடமிருந்து வலம்

1 பொக்குவாய்
3 சோதி 6. சாதகப்
9 கலை 11. வாரிசு
12 தவலை 14 ரோமம்
புலி 15. மின் 16 வி
17 சதி 18 அரவம்
19. தலைமகன் 20. புலி

மேலிருந்து கீழ்

1 பொச்சாவாமை
2. வாரம் 4. இ
5. முகவரி 7. தரி
8. கதிரோன் 10 லை
(வலை) 12. தபுதாரன்
13 விகத (தலை
15. மிதிலை 16 வீப்பு
17 சத 18 அக

சொற்சிலம்பம் போட்டி இல. 65 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- செல்வி திருநாவுக்கரசு உமா,
குராவத்தை,
சுன்னாகம்.

இரண்டாம் பரிசு:- திருமதி க. லலிதாதேவி,
சல்வரபனம்,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

மூன்றாம் பரிசு:- செல்வன் இ. விஜயகுமார்,
கிலவலை,
மாதகல்.

* பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

பட்டித்திடல் கிராமத்தில் .....

8ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நிமிடம் நின்று அவர்களுக்காய் அழுவதற்குக் கூட நேரமிருக்காது பின்னால் வேட்டை நாய்கள்போல் வேட்டுக்களைத் தீர்த்தபடி சிப்பாய்கள் வருவார்கள்.

அப்போது ஒவ்வொரு மக்களும் தம் கையைப் பிடித்த உறவுகளைக் கூட உதறிவிட்டு உயிரைப் பிடித்துக்கொண்டு ஓடுவார்கள்.

பாம்பு தீண்டி மாண்ட கர்ப்பிணி

ஒரு சமயம் ஒரு கர்ப்பிணிப்பெண் பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்தபோது சிப்பாய்கள் வரவே உறவினர்கள் அவளைப் பற்றைக்குள் ஒளித்து வைத்தனர்.

அங்கே அவள் பாம்பு தீண்டி மாண்டுபோனாள். அவள் வயிற்றில் இருந்த குழந்தைக்கு அதன் கருவறையே கல்லறையானது அவளது பிணத்தைக்கூட புதைக்க நேரமின்றி அப்படியே விட்டு விட்டுச் சென்றனர் உறவினர்.

எல்லாவற்றையும் விட கொடிய நிகழ்வு சென்ற மாதம் 26 ஆம் திகதி நடைபெற்றது.

பட்டித்திடலுக்கு அருகேயுள்ள ஓர் ஆரம்பப் பாடசாலைக்கருகில் ஒரு கண்ணிவெடியில் சில சிப்பாய்கள் சிக்கிக் கொண்டனர். சிப்பாய்கள் ஊர்காவல் படையினருடன் ஊருக்குள் உட்புகுந்தனர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஊர்மக்கள் காட்டுக்குள் ஓடி ஒளிந்தனர்

ஒளிக்க முன் அவர்களை ஒழிக்கவென ஓடி வந்தனர் ஆட்கொல்லி அரசின் படைகள்.

நான்கு குடும்பங்கள் மறைய மார்க்கமின்றி மாட்டிக் கொண்டன.

வழிபாடு

நாராயணசாமி என்பவர் தனது வீட்டுத் தட்டுப் படலையால் எட்டிப் பார்த்தார்.

தட்டியைத் திறந்தவர் பேயறைந்தவர் போலானார்.

சிப்பாய்கள் கொலை வெறியுடன் வருவதைக் கண்டதும் குலை நடுங்கிப் போனார்.

சமயோசிதம்

சமயோசிதமாக ஒரு வேலை செய்தார்.

ஓடிச் சென்று வீட்டிலிருந்த இரு குத்துவிளக்குகளை முற்றத்துக்கு எடுத்து வந்தார்.

சுவாமிப் படங்களையும் சுற்றிவரப் பரப்பி வைத்தார்.

சாம்பிராணிக் குச்சிகளைக் கொழுத்தி வைத்தார்.

தேங்காய், பழங்களை பரப்பி வைத்தார் மனைவி பிள்ளைகளை சுற்றிவர இருத்தி வைத்தார்.

மந்திரவாதிபோல் மந்திரத்தை செபிக்கத் தொடங்கினார்.

அவர்களை வெட்ட வென்று கிட்ட வந்த சிப்பாய்கள்.

மந்திரவாதிபோல் நடித்த நாராயணசாமியார் அவரது குடும்பம் தப்பியது.

19 பேர் படுகொலை

ஆனால் மற்ற மூன்று குடும்பங்கள், அவற்றைச் சேர்ந்த 19 பேர் ... நடந்ததை வர்ணித்தால் வார்த்தைகளுக்கே வலி ஏற்படும்.

பத்திநாதர் அவரது மனைவி உட்பட அவரது குடும்பத்தில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்

இக்குடும்பத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாந்தி எனும் ஏழுவயதுப்பெண் எட்டுத் துண்டங்களாக வெட்டப்பட்டாள்.

திருமதி சின்னத்தம்பி குடும்பத்தில் 4 பேர் கொலைப்பட்டனர். உனைநாதன் குடும்பத்தில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த 8 மாதக் குழந்தையான ஜெயரதியின் கால்கள் இரண்டாகக் கிழிக்கப்பட்டன.

மேரி எனும் 26 வயதுப் பெண் நிர்வாணமாக்கப்பட்டு [illegible] வெட்டப்பட்டாள். 55 வயதான நல்லையா பாதிப்பொடி என்பவர் வெட்டப்பட்டு,கைகளின் இடத்தில் கால்களும், கால்களின் இடத்தில் கைகளும் வைக்கப்பட்டு இருந்தன.

மூன்று நாட்களாக எந்தச் சடலங்களும் அகற்றப்படவில்லை.

திருமதி சித்தாமணி என்பவரும் சில இளைஞர்களும் 3 ஆம் நாள் அங்கே சென்றபோது சடலங்கள் அப்படியே அங்கு கிடந்தன.

தம்பிப்பிள்ளை எனும் 55 வயது முதியவரின் உடல் கைகள் கும்பிட்ட நிலையில் குப்புறக் கிடந்தது. தலை தனியே கிடந்தது

யோகேஸ்வரி எனும் 26 வயது இளம் பெண்ணின் சடலம் காட்டு நாய் குதறிய வீட்டுப் பூனைபோல் குடல் வெளியே வந்து குதறப் பட்டுக் கிடந்தது.

சடலங்கள் எதுவும் உடல்களாக இல்லை குடல்களாகவும், ஆங்காங்கே வெறும் அங்கங்களாகவும் கிடந்தன.

சுட்டுக் கொன்றால் சிந்துகின்ற இரத்தம் சிறிது என்பதால், வெட்டிக் கொன்று வேள்வி நடத்தினார்கள் போலும்!

ஆங்காங்கே இடந்த அங்கங்களைப் பொறுக்கிச் சேர்த்து ஒன்றாக எடுத்துச் சென்று பெரிய குழி வெட்டிப் புதைத்தனர். *



முதியவர்: பள்ளிக்கூடப் பக்கம் மழைக்குக் கூட ஒதுங்காத என்னை மனிசிக்கும் இப்ப சில இங்கிலிஷ் எழுத்துக்கள் தெரியும்.

மற்றவர்: அதென்ன எழுத்துக்கள்.

முதியவர்: பதுங்குகுழி அமைக்கிற L, Z, W, H என்ற எழுத்துக்கள் தான்.

பொன்.
அம்பிகைபாகன்

நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கைவங்கியின் 15-05-87ஆந் திகதிய மாற்று விகிதமாகும்).

வெளிநாட்டு நாணயம்	இலங்கையில் (ரூபா சதத்தில்)
ஸ்ரேலிங் பவுண்	47. 75
அமெ. டாலர்	28. 84
இந்திய ரூபா	2.17
ஜேர்மன் மார்க்	16. 05
கனடா டாலர்	21. 33
பிராங் (பிரெஞ்சு)	4. 80
பிராங் (சுவிஸ்)	19. 34
அவுஸ். டாலர்	20 34
சிங்கப்பூர் டாலர்	[illegible]
நோர்வே குரோனர்	4 27
ஜப்பானிய யென்	[illegible]

'உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்,
'உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு ஆதரவு கொடுப்போம்',
"மில்க்வைற் தயாரிப்புகளுக்கு"
நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் நற்பணிகளுக்கே
மில்க்வைற் தொழிலகம்
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி

16- 05- 1987 சனிக்கிழமை

[illegible]
வெயில் அதிகம், வெயர்வை அதிகம்,
உடம்பு நன்றாக இருக்க வேண்டும்
சருமத்தின் நீராடுதல் அவசியம்
ஔடத குணம் நிறைந்த
வேப்பெண்ணெய் கலந்து தயாரித்த
"நீம் சோப்"
தேய்த்து நீராடிப்பாருங்கள்
இது மில்க்வைற் தயாரிப்பு

ஜே.வி.பியினரைத் தேடி காடுகளில் வேட்டை

கொழும்பு,மே 16
தடை செய்யப்பட்ட ஜே.வி.பி. இயக்க உறுப்பினர்களைக் கண்டு பிடிப்பதற்காக தென் இலங்கைக் காடுகளில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடத்திவருகின்றனர்;

ஜே.வி.பியினரின் ஆயுதப்பயிற்சி முகாம்கள் தென் இலங்கைக் காடுகளினுள் அமைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்துள்ள தகவல்களைத் தொடர்ந்தே இத் தேடுதல் நடவடிக்கை.

தென், தென்கிழக்கு பகுதிக் காடுகளில் இம்முகாம்கள் அமைந்துள்ளனவாம்.

வெல்லவாயக் காடுகள் ஜே.வி.பியினரின் முக்கிய கோட்டையாக விளங்குவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

பத்திரிகைகளுக்கும் பிஜித்தீவில் மூடுவிழா!

சுவா, மே 16
பிஜித்தீவில் இரண்டு பத்திரிகை நிறுவனங்கள் மூடப்பட்டன.

கடும் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இரத்தம் சிந்தாப் புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றிய 37 வயதான இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் கேர்னல் சித்திவேனி ரபுக்கா, கடும் தணிக்கை உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்.

இதனிடையில் கேர்னல் ரபுக்கா தலைமையில் 15 பேர் கொண்ட அமைச்சரவை நேற்றுப் பதவி ஏற்றது.

வெளியுறவு அமைச்சராக முன்னாள் பிரதமர் சேர் கமீசேமாரா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் இவரின் கட்சி தோற்கடிக்கப்பட்டது.

தற்போது அங்கு வானொலியில் அரசுச் செய்திகள் மட்டுமே ஒலிபரப்பப்படுகின்றன. (உ-எ)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே வழி

மொரிஷியஸ் அமைச்சர் வலியுறுத்து

சென்னை, மே 16
இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டும்.

அதற்கான முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டும்

மொரிஷியஸ் கல்வி அமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

சுமுகமான தீர்வுகாண பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும். அப்படி நடத்தப்படும் என்று மொரிஷியஸ் அரசு நம்புகின்றது.

தமிழ் மக்கள் கௌரவமாக வாழக் கூடிய அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

— இப்படி திரு. பரசுராமன் சொன்னார்.

திரு. பரசுராமன் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைபற்றி இருவரும் பேசினர்.

அமைச்சர்கள் ராஜாராம், சி. பொன்னையன், தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானகிராமணியார் ஆகியோரையும் அமைச்சர் பரசுராமன் சந்தித்தார். (உ-எ)

அச்சுவேலியில் ஹெலி,ஷெல் தாக்குதல்

பலாலி, மே 16
கடந்த வியாழக்கிழமை பகல் இரண்டு தடவைகளாக ஹெலிகொப்டர்கள் இரண்டில் இருந்து 50 ஹலிபர் துப்பாக்கித் தாக்குதலும் அதிகாலை ஷெல்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதால் அச்சுவேலிப் பகுதி மக்கள் பீதியடைந்து அல்லோலகல்லோலப்பட நேர்ந்தது

ஒரு மணித்தியாலமாக ஹெலிக்கொப்டர்கள் இரண்டும் சீப்ளேன் ஒன்றும் வல்லைச் சந்தியில் இருந்து மேற்கொண்ட தாக்குதலால் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

அச்சுவேலியில் ஆரம்பிக்கப்பட்ட ஹெலித் தாக்குதல் தொடர்ந்து புத்தூர்வரையும் நீடித்தது.

அதிகாலை ஏவப்பட்ட ஷெல் வல்லை, அச்சுவேலி தெற்கு கலட்டி, ஆவரங்கால பகுதிகளில் விழுந்து வெடித்ததிலும் இரண்டு வீடுகள் சேதமுற்றன. (உ-119)

பிரித்து...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)
அமைதி ஏற்படவும் இதே வழியைப் பின்பற்றலாம் அல்லவா!

-இப்படி ராணி சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது. (உ-ஐ-எ)

வெற்றிடம்
விநியோகப் பையன்கள்
தினமும் பத்திரிகை விநியோகிப்பதற்கு விநியோகப் பையன்கள் தேவை. சொந்தமாக சைக்கிள் வைத்திருப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நியாயமான பிணைப் பணம் செலுத்த வேண்டியது அவசியம்.
விண்ணப்பிக்குக:—
விளம்பர இல:- 83
மே/பா:- உதயன்
தபால் பெட்டி இல:- 23
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி:16-05-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd, at 292/2, Navalar Road, Jaffna on Saturday May 16, 1987

பஞ்சாப் விவகாரம் ராஜீவுக்கு மற்றும் ஒரு சவால்!

ஹரியானா தேர்தல் முடியும் வரை புதிய முயற்சி சாத்தியம் இல்லை

சீக்கியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வட இந்திய மாநிலமான பஞ்சாப் மீண்டும் மத்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதாவது சட்டசபை கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி அங்கு பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

பஞ்சாப்பில் அமைதியை ஏற்படுத்தும் சகலமுயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்த நிலையில் ராஜீவ்காந்தியின் மத்திய அரசாங்கம் இந்த திடீர் முடிவுக்கு வந்திருக்கிறது

மிதவாதியான சுர்ஜித் சிங் பர்னாலாவைத் தலைவராகக் கொண்ட அகாலிதள அரசு தற்போது கலைக்கப்பட்டிருப்பதால் ராஜீவ்காந்தியின் மத்திய அரசாங்கம் பஞ்சாப் பிரச்சினைத் தீர்வுக்கு புதிய அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

1985 ஒப்பந்தம்

முதலமைச்சர் சுர்ஜித் சிங் பர்னாலாவின் அரசாங்கம் 1985 செப்டம்பர் மாதம் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் பதவிக்கு வந்தது.

பஞ்சாப்புக்கு மேலதிக சுயாட்சி கோரும் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் ஒப்பந்தத்தை அதே ஆண்டு ஜூலை மாதம் ராஜீவ்காந்திக்கும் அகாலிதள தலைவர் லோங்கோவாலுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இரண்டு வருட கால ஜனாதிபதி ஆட்சியின் பின்பே ஒப்பந்தம் செய்யப்பட்டு தேர்தலுக்கான சூழ்நிலை உருவானது.

ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து சீக்கிய தீவிரவாதிகளால் லோங்கோவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரின் மரணத்தை அடுத்தே சுர்ஜித் சிங் பர்னாலா அகாலிதள கட்சியின் தலைவராகி சட்டசபைத் தேர்தலில் வென்று முதலமைச்சர் ஆனார்.

சுர்ஜித்சிங் பர்னாலா அரசு ஆட்சியைக் கைப்பற்றி சுமார் இரண்டு வருடங்கள் கழிந்தும் ஒப்பந்தம் அமுல் செய்யப்படவில்லை.

இந்த நிலையிலேயே தற்போது அவரது ஆட்சி கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி அங்கு பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தம் அமுலாகாததுக்கு ராஜீவ்காந்தியின் மத்திய அரசும் சுர்ஜித் சிங் பர்னாலாவின் மாநில அரசும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிவந்தன.

அமுலாகாதது ஏன்?

பஞ்சாப்பிலுள்ள சிறுபான்மை இந்துக்களின் எதிர்ப்பு – சீக்கிய தீவிரவாதிகளின் எதிர்ப்பு — சுர்ஜித்சிங் பர்னாலாவின் அரசியல் பலவீனம் ஆகியவையே ஒப்பந்தம் அமுல் செய்யப்படாததுக்குக் காரணம் என்று நம்பப்படுகிறது.

இத்தலைவுடன் ஆரம்பம் முதல் இதுவரை 300க்கும் அதிகமானோர் பஞ்சாப்பில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு பர்னாலா அரசு தவறி இருந்தது

அத்துடன் பஞ்சாப்பின் 12 பிராந்தியங்களின் கட்டுப்பாட்டையும் பர்னாலா அரசு இழந்திருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் மத தீவிரவாதிகளும் பயங்கரவாதிகளும் பஞ்சாப் மாநிலத்தின் அரசவாசிப்பகுதியில் ஆதிக்கம் செலுத்திவந்தனர்

பர்னாலா அரசின் அமைச்சர்கள் சிலரின் மறைமுக ஆதரவும் இவர்களுக்கு இருந்துவந்தது

உயிருக்கு அஞ்சிப் பலர் சீக்கிய தீவிரவாதிகளுக்கு மாமூல் செலுத்த தயங்கிவந்தனர்.

பஞ்சாப்பின் சட்டமும் ஒழுங்கும் முழுமையில் சீர்குலைந்தன.

படுகொலைகளுக்கும் வன்முறைகளுக்கும் அஞ்சி ஆயிரக்கணக்கான இந்துக்கள் அண்டை மாநிலமான ஹரியானாவிற்குள் சென்று குடியேறினர்.

இந்த நிலையிலேயே தற்போது பர்னாலா அரசு கலைக்கப்பட்டிருக்கிறது

கடந்த 20வருடகாலத்தில் 9வது தடவையாக மத்திய அரசின் நேரடி ஆட்சியின்கீழ் பஞ்சாப் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தல் தோல்வியின் பின்னர் பஞ்சாப்பின் தற்போதைய நிலைமை ராஜீவுக்கு மற்றும் ஒரு சவால் என்றே கூற வேண்டியிருக்கிறது.

அடுத்த மாதம் நடைபெறும் ஹரியானா சட்டசபைத் தேர்தலில் எப்படியாவது வெற்றிபெறுவது என்பதில் இந்திரா காங்கிரஸ் உறுதியாக இருப்பதால் ஹரியானா தேர்தல் முடிவடையும் வரை பஞ்சாப் தீவிரவாதிகளுடன் ராஜீவ் எந்தவொரு தொடர்பையும் வைத்துக்கொள்ள மாட்டார் என்பது திண்ணம்.

*

உலக உலா
என்.பி.சீலன்

யாழ் மாவட்டத்திற்கு இட மாற்றம் பெற்ற ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், மே 16
வெளிமாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்துக்கு இட மாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களில் ஒரு பகுதியினரின் பெயர்ப் பட்டியல் வருமாறு:-

மிகுதிப் பேரின் பெயர் விபரங்கள் உதயனில் தொடர்ந்து வெளிவரும்.

ஆசிரியர்களின் பெயர்களும் அவர்கள் இட மாற்றம் பெற்றுள்ள பாடசாலைகளும் வருமாறு:-

நல்லூர் வட்டாரம்

திருமதி ஜே. குலசிங்கம் (கொக்குவில் இந்து) திருமதி எஸ் பாலகுமார் (திருநெல்வேலி றோ. க. த. க. பா.), கே சண்முகநாதன் (அரியாலை ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), திருமதி என்.எச். வில்லியம்ஸ் (ஆசீர்வாதப்பர் வித்தியாலயம்), சி. உதயசந்திரன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி என். விஸ்வநாதன் (கொக்குவில் ஞான பண்டித வித்தியாலயம்)

கே. அருள்தாஸ் (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), திருமதி ரி தனலிங்கம் (திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம்), திருமதி ஜெ சிவரவிந்தம் (இளையதம்பி வித்தியாலயம்), எம். கே முத்துக்குமாரு (யாழ்.இந்து), திரு. ஏ. ஜெயக்குமார் (செங்குந்தா இந்து), எஸ். சோமாஸ்கந்தன் (கொக்குவில் இந்து), ஆர்.அரசகுலசூரியர் (கனகரத்தினம் ம.வி.)

திருமதி ரி தயாபரராசா (நல்லூர் ஸ்தானிய பாடசாலை), திருமதி எஸ் சிவபாலேஸ்வரராஜா (நல்லூர் இந்து பெண்கள் பாடசாலை), பி. பத்மநாதன் (கொண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), ஆர். மணிவண்ணன் (யாழ். இந்து) செல்வி எம். அப்பாத்துரை (இளையதம்பி வித்தியாலயம்)(எஸ் கே. தர்மலிங்கம் கனகரெத்தினம் ம ம வி) வி. ஞானசாந்தன் (முத்துத்தம்பி வித்தியாலயம்), திரு ஐ. இராசரத்தினம் (யாழ். இந்து). திருமதி எம். அருந்தவராசா (கொண்டாவில் இந்து ம வி) திருமதி கே. ஏ. பேரம்பலம் (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்) திருமதி கே சந்திரசாமி (திருநெல்வேலி றோ. க. த. க. பாடசாலை), செல்வி எம் தர்மலிங்கம் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), செல்வி வி. பாலாம்பிகை (முத்துத்தம்பி ம.வி), திரு ஆர். தவராசா (ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை), செல்வி வை பொன்னம்பலம் (ஆனைப்பந்தி மெ.மி த. பாடசாலை), திருமதி எஸ் சந்திரராசா (கனகரெத்தினம் ம ம வி), திரு கே சந்திரபாலன் (கொண்டாவில் ம வி) திரு. எஸ். சிவப்பிரகாசம் (கனகரெத்தினம் ம ம.வி) (உ-7)

(தொடரும்)

யாழ் பொலிஸ் நிலைய எழுதுவினைஞர் சிலர்

வவுனியாவுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மே 16
யாழ் பொலிஸ் நிலையத்தின் சம்பளப் பகுதியில் கடமையாற்றிய எழுதுவினைஞர்களை வவுனியாவுக்கு வரும்படி பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

யாழ் பொலிஸ் நிலையத்தில் கடமை முடிந்து வந்த பொலிஸார் ஊழியர்கள் மீது அண்மையில் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து தொண்ணூறுக்கும் அதிகமான பொலிஸாரையும் ஊழியர்களையும் கடமைக்குச் செல்ல வேண்டாம் என்று பொலிஸ் அத்தியட்சகர் பணித்திருந்தார்.

இவர்களுக்கு வேதனம் வழங்குவதிலும் தாமதம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இதனையடுத்து வவுனியாவில் சம்பளப் பட்டியல் தயாரிப்பதற்காக யாழ் பொலிஸ் நிலையத்தில் சம்பளப் பகுதியில் கடமையாற்றிய அந்த ஊழியர்களையும் உடனடியாக வவுனியாவுக்கு வருமாறு பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (உ-10)

பஞ்சாபில் மீண்டும் பர்னாலா அரசு

புதுடில்லி, மே 16
பஞ்சாப் மாநிலத்தில் சமூக நிலை ஏற்பட்டதும் பெரும்பான்மையை நிரூபிக்கும் அரசியல் கட்சிக்கு ஆட்சி அமைக்க அனுமதி அளிக்கப்படும்.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

தன்னைச் சந்தித்த சீக்கியத் தலைவர்கள் சிலர் மத்தியில் பேசுகையில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 16
மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு மன்னார் அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (உ-10)

போலந்தில்---

(7ம் பக்கத் தொடர்ச்சி)
நூலின் ஒரு பக்கத்தில்...

'ஒருவன் தனது வாழ்நாளில் தான் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தத் தவறினால், அவனது மரணத்துக்கும் மறுபிறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் இதனைச் செய்ய இறைவன் ஒரு வாய்ப்பைத் தருகிறான்.

இந்த வாய்ப்பு இறைவனின் கருணையே அன்றி வேறு இல்லை'—

இந்த வாசகங்கள் காணப்பட்டன.

எவ்வளவு அர்த்தம் பொதிந்த வாசகங்கள்! இதனை ஒரு விமான விபத்து உணர்த்தி விட்டது.

ஆதாரம்: ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம்

பனி மனிதன் காலடி: இமயமலையில் கண்டுபிடிப்பு

லண்டன், மே 16
இமயமலையில் நடமாடுவதாக நம்பப்படும் பனி மனிதனின் காலடிகளைப் படம் பிடித்துக்கொண்டு வந்துள்ளதாக மலை ஏறும் கோஷ்டி ஒன்று அறிவித்து உள்ளது.

திபெத் பக்கமாக உள்ள இமயமலையை ஒட்டியுள்ள மென்லுங்கிஸ் சிகரத்தை ஏறிப் பிடிக்கும் முயற்சியில் இரண்டு மலையேறும் வீரர்களான கிறிஸ் பொனிங்டன், ஜிம் பொதரிங்ஹாம் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

இச் சிகரத்தை இன்னும் மனிதன் பிடிக்கவில்லை. இந்தக் கோஷ்டியும் இம் முயற்சியில் தோல்வி கண்டு விட்டது.

''அங்கு 15 ஆயிரத்து 600 அடி உயரத்தில் பனி மனிதனின் காலடிகளைப் படம் பிடித்துள்ளோம் இப்படி அந்தக் குழு லண்டனில் அறிவித்து உள்ளது. (உ-எ)

வேம்படி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்ந்து இயங்குமா அல்லது அதனை இடம் மாற்றுவதா என்பது குறித்த இறுதி முடிவு ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறும் அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

இவ்வாறு மத்திய கல்லூரி அதிபர் தெரிவித்தார். (உ-7-10)

இயற்கை உயிரிழப்பு என அறிவிப்பு

மதுரை, மே 16
மண்டபத்துக்கு அருகில் பாக்குநீரிணைக் கடலில் லட்சக்கணக்கான மீன்வகைகள், நண்டுகள் இறந்த சம்பவம் இயற்கையானது என்று அறிவிக்கப்படுகிறது.

வெடிவைத்தோ, நஞ்சூட்டியோ மீன்கள் கொல்லப்படவில்லை. கடல்வள ஆராய்ச்சி நிபுணர்கள் நடத்திய ஆய்வின் பின்னர் இது கண்டு பிடிக்கப்பட்டது.

அப்பகுதியில் கடலின் ஆழத்தில் காற்றுக் குறைந்து காணப்பட்ட போதே இம்மீன்கள் உயிரிழந்தன என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-எ)

வயாவிளான்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
வீட்டின் முன் விழுந்தது.

ஷெல் வேம்பமரத்தில் விழுந்ததினால் இவரது வீட்டிற்குப் பாதிப்பு ஏற்படவில்லை.

இதன் ஒரு பகுதியான 8 அங்குல நீளமுள்ள ஷெல் சிதறல் ஒன்று திருநெல்வேலி நாவலர் வீதியில் குடியிருக்கும் ஜீவரத்தினம் என்பவரது வீட்டு விறாந்தையில் விழுந்தது.

ஜீவரத்தினம் குடும்பமும், சோதிலிங்கம் குடும்பமும் மயிரிழையில் தப்பின.

திருநெல்வேலி காளி கோவிலடிப் பகுதியிலும் சிறு துண்டுகள் விழுந்தன.

இதே வேளை பலாலி இராணுவ முகாம் பகுதியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் துண்டுகள் மூன்றாவது தடவையாக உரும்பிராய்ப் பகுதியிலும் விழுந்து வெடித்துள்ளன.

மேலும் ஒரு ஷெல் துண்டு கன்னாதிட்டி பழைய பொலிஸ் நிலையத்துக்கு [illegible] (உ-10-155)

தமிழர் ---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

[illegible] (உ-எ)

திங்கள் விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 16
யாழ் பல்கலைக்கழக விரிவுரைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த விரிவுரைகள் யாழ் ஆஸ்பத்திரியின் மூடும் உத்தரவை அடுத்து தடைப்பட்டன.

இப்பொழுது ஆஸ்பத்திரி தொடர்ந்து இயங்குவது பற்றிய முயற்சிகளில் முன்னேற்றம் தெரிவதனாலும், மாணவர்கள் நெருக்குவதனாலும் திங்கட்கிழமை ஆரம்பமாகும் விரிவுரைகளுக்குச் செல்வதென மாணவ பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர். (உ-7)

கிழக்கு ---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
யில் தெரிகின்றது. அது உண்மையான நிலைப்பாடல்ல.

மேல் நாட்டவர் இப்போது கண்டுபிடிக்கும் தத்துவங்கள், கோட்பாடுகள் எல்லாம் கீழைத் தேசத்தவர் பலாயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்டுகொண்டவை; கண்டுபிடித்தவை.

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி... என்று ஔவை சொன்னதை இன்று அணு சக்தியால் இயங்கும் சமுத்திரம் விட்டு சமுத்திரம் பாயும் ஏவுகணைகள் நிரூபிக்கின்றன.

இதேபோல் ஏராளமான உதாரணங்கள் கூறலாம். அதற்கு என்னபயன்? எமது முதாதையர் விட்டுச்சென்ற விஞ்ஞான அறிவை இனம் கண்டு அதனை எமது மக்களின் வாழ்க்கை முன்னேற்றப் பயன்படுத்த வேண்டும்.

நமது சொந்தச் ''சரக்கை'' நாமே பயன்படுத்தாவிடில் வேறு யார் பயன்படுத்துவார்?

விபத்தில் பலி!

புதுடில்லி, மே 16
அருணாசலப் பிரதேசத்தில் நேற்றுக் காலை நடந்த பஸ் விபத்து ஒன்றில் குறைந்தது 39 பயணிகள் உயிரிழந்தனர்;

இருபதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். (உ-எ)

வெற்றிடம்
அச்சக முகாமையாளர்
அச்சுத் தொழில் (Commercial Printing) மேற்பார்வை செய்வதற்கு போதிய அனுபவமுள்ள அச்சக முகாமையாளர் தேவை.
யாழ் நகரில் இருந்து மூன்று மைல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வதிவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
முன் அனுபவத்திற்கு ஏற்றவாறு வேதனம் பேசித் தீர்மானிக்கலாம். உடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல:- 75,
மே/பா:- உதயன்
தபால் பெட்டி இல:- 23
யாழ்ப்பாணம்.